SEPTEMBER 02, 2020
WEDNESDAY
VOL: 006/086
RS. 10.00
LATE CITY★

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

நல்லிணக்க, மத அலுவல்களை இல்லாமற் செய்தமை:

# ‘பிற இனங்களின் இருப்பை அச்சுறுத்தும்’



சுரேஷ் கேள்வி: தனிசிங்கள கருமத்துக்கான முயற்சியும் தீவிரம் என்கிறார்

■ எஸ்.நிதர்ஷன்

புதிய அரசாங்கத்தில், பெரும் எண்ணிக்கையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும் முப்பதுக்கும் மேற்பட்ட இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும், நல்லிணக்க அமைச்சும் மத அலுவல்கள் அமைச்சும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இது, பிற தேசிய இனங்களின் இருப்பை அச்சுறுத்தும் செயலாகுமெனத் தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், தனி சிங்களத்தில் மட்டுமே கருமங்களை முன்னெடுக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன என்கிறார்.

“அரசகரும மொழியாக தமிழ் மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், இதுவரை அது முழுமையாக நடைமுறையில் இல்லை. திணைக்களங்கள், அமைச்சுகளில் தனிச்சிங்களத்திலேயே சகல நடவடிக்கைகளும் இன்னமும் மேற்கொள்ளப்படுகின்றன. தமிழாசிரியர்கள் உட்பட தமிழ் மொழி மூலமான அரச தரப்பினர் பலரும் சிங்கள மொழியிலேயே கடிதங்களையும் சுற்றுநிருபங்களையும் பெறுகின்றனர். இதுதான் வெளிப்படையான உண்மையாகும்” என்றும் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘இழுத்தெடுக்கும் செய்தி பொய்’

## கஜேந்திரகுமார் எம்.பி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான சட்டத்தரணி வி.மணிவண்ணனின் அணியில் இருப்பவர்களை, தமது பக்கம் கொண்டுவரும் முயற்சி முன்னெடுக்கப்படுவதாக வெளியான செய்தியை மறுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், இவ்வாறு வெளியாகும் செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென்று கூறினார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் யாழ்ப்பாணம்

தொடர்ச்சி P2

# சொக்கா மல்லி விவகாரம்; திருவுளச்சீட்டுக்கு முஸ்தீபு





கடந்த பொதுத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய, “சொக்கா மல்லி” என்றழைக்கப்படும். பிரேமலால் ஜயசேகர, தனது ஆசனத்தை இழப்பாராயின், அவருக்குப் பதிலாக ஒருவரை தெரிவுசெய்வதற்கு “திருவுளச்சீட்டை” பயன்படுத்துவதற்கு, தேர்தல் ஆணைக்குழு ஆலோசித்துவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

11 ஆசனங்களைக் கொண்ட இரத்தினபுரி மாவட்டத்தில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எட்டு ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களையும் பெற்றுக்கொண்டன. இதில், பொதுஜன

தொடர்ச்சி P2

தமிழ் முற்போக்குக் கூட்டணியில்

# தமிழை அழிக்க ஆலோசனை?

■ பா.நிரோஸ்

நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணியில், “தமிழை” இல்லாமற் செய்து, புதிய பெயரைச் சூட்டுவதற்கு, ஆராயப்பட்டுவருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய முன்னணி ஆகியன இணைந்தே, தமிழ் முற்போக்குக் கூட்டணி உருவாக்கப்பட்டது. அக்கூட்டணி கடந்த பொதுத்தேர்தலில் கொழும்பு, நுவரெலியா, பதுளை, கண்டி, கம்பஹா, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் போட்டியிட்டு, ஆறு ஆசனங்களைத் தனதாக்கிக்கொண்டது.

இந்நிலையில், அக்கூட்டணியை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கான முயற்சிகளை, கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் முன்னெடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

குறைந்த வருமானமுடையோர் விவகாரம்:

# தொழில் வழங்குதல் இன்று முதல் ஆரம்பம்

வறுமையை ஒழிப்பதற்காக, குறைந்த வருமானமுடைய ஒரு இலட்சம் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு தொழில் வழங்குதல் இன்று (02) ஆரம்பமாகுமெனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ஊடகப் பிரிவு, தொழில் பெறுபவர்கள், எந்தவொரு தரப்பினருக்கும் பணம் அல்லது எவ்வகையான இலஞ்சமும் வழங்குவது தொழில்வாய்ப்பு நிராகரிக்கப்பட காரணமாக அமையலாமென அறிவித்துள்ளது,

**“ தொழில் பெறுபவர்கள், எந்தவொரு தரப்பினருக்கும் பணம் அல்லது எவ்வகையான இலஞ்சமும் வழங்குவது தொழில்வாய்ப்பு நிராகரிக்கப்பட காரணமாக அமையலாம்**

அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பல்துறை அபிவிருத்தி செயலணி மூலம் குறைந்த வருமானமுடைய மற்றும் தேர்ச்சி பெறாதவர்களைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்துவதே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகுமென

தொடர்ச்சி P2

முகர்ஜியின் பூதவுடல்

# அரசு மரியாதையுடன் தகனம்

## கொழும்பில் அனுதாபப் பதிவேடு



இந்தியாவின் 13ஆவது குடியரசுத் தலைவர் மறைந்த பிரணாப் முகர்ஜியின் பூதவுடல், புதுடெல்லியில் உள்ள லோதி மின் மயானத்தில் பூரண அரச மரியாதையுடன், நேற்று (01) தகனம் செய்யப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த அவர், புதுடெல்லி இராணுவ மருத்துவமனையில் திங்கட்கிழமை (31) தனது 84ஆவது வயதில் காலமானார். அன்னாரது மறைவுக்கு இந்திய அரசியல் தலைவர்கள், உலக நாடுகளின் தலைவர்கள், முக்கிய பிரமுகர்கள், பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்திருந்தனர்.

தொடர்ச்சி P2

# பங்குச்சந்தை டிஜிட்டல் மயம்



பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷவின் அறிவுறுத்தல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக, கொழும்பு பங்குச்சந்தை, டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதென, பங்கு மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு அறிவித்துள்ளது.


உலகை ஒரு புதிய பரிமாணத்துக்கு வெளிப்படுத்தும் மூலோபாயத்தின் கீழ் பங்குச்சந்தையை டிஜிட்டல் மயமாக்கும் செயல்முறை பிரதமரின் ஆலோசனையின் பேரில் ஆரம்பிக்கப்பட்டதெனத் தெரிவித்துள்ள ஆணைக்குழுவின் முக்கியஸ்தர்கள், கொழும்பு பங்குச்சந்தையின் சகல நடவடிக்கைகளும், செப்டெம்பர் 17ஆம் திகதி முதல் டிஜிட்டல் மூலமாக

தொடர்ச்சி P2

ஒரே விமானத்தில் வந்தோரில்

# 54 பேருக்கு கொரோனா

## சுகாதார அமைச்சு தகவல்; 398 பேர் பயணித்துள்ளனர்



கட்டாரிலிருந்து ஒரே விமானத்தில் பயணித்தவர்களில் 54 பேருக்கு, கொரோ வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதென தெரிவித்துள்ள சுகாதார அமைச்சு, இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 3,075ஆக அதிகரித்துள்ளது. அந்த விமானத்தில் 398 பேர் பயணம் செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

“விமானத்தில் பயணித்த அனைவரும் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு

தொடர்ச்சி P2

# சு.கவின் 69ஆவது ஆண்டுவிழா இன்று



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 69ஆவது ஆண்டுவிழா, மிகவும் எளிமையான முறையில், இன்று (02) அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இம்முறை கட்சி மாநாட்டை நடத்தாமல், பூஜை வழிபாடுகளில் மட்டுமே ஈடுபடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், பெல்லங்வில விஹாரையில், இன்று (02) மாலை 6 மணிக்கு பிரதான பூஜை நடைபெறும். இதில், கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன பங்கேற்பார்.

தொடர்ச்சி P2

# இணையத்தள ஆசிரியருக்கு விளக்கமறியல்



குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட இணையத்தள ஆசிரியர் டெஸ்மன்ட் சதுரங்க டி அல்விஸ், செப்டெம்பர் 14ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு இடையூறுகளை ஏற்படுத்தும் வகையில் இணையத்தளத்தில் செய்தியை வெளியிட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று முன்தினம் அவர் கைதுசெய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

# 18 பெண் கைதிகள் உட்பட 444 கைதிகள் விடுதலை

ஜனாதிபதி வழங்கிய அரச பொதுமன்னிப்பின் கீழ், சிறைச்சாலை கைதிகள் 444 பேர், நேற்று (01) விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என அறிவித்துள்ள சிறைச்சாலைகள் திணைக்களம், இதில், 18 பெண் கைதிகளும் அடங்குவரெனவும் கூறியுள்ளது.

“சிறைச்சாலைகளிலிருந்து கிடைக்கப்பெற்ற பெயர் விவரங்கள் அடங்கிய பட்டியலுக்கு அமையவே, மேற்படி 444 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்” என, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# நீர் பயன்பாட்டில் சிக்கனம் வேண்டும்

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக, நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு, பாவனையாளர்களுக்கு, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதேவேளை, வரட்சி காரணமாக நாட்டின் பல பகுதிகளுக்கு நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும், வடிகாலமைப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2


# ‘என்னை அழைக்காதீர்கள்’



தனிப்பட்ட வைபவங்களுக்கு தன்னை அழைக்க வேண்டாமெனக் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, கேட்டுக்கொண்டு உள்ளாரென அறிவித்துள்ள ஜனாதிபதி ஊடகப்பிரிவு, அரச கடமைகளில் தனது கவனத்தை செலுத்த ஜனாதிபதி விரும்புகிறார் எனவும் அறிவித்துள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘பிற இனங்களின் இருப்பை அச்சுறுத்தும்’



அரச கருமமொழி அமலாக்கல் அமைச்சு, ஏனைய மத விவகாரங்களுக்கான அமைச்சுகள் இல்லாமல் செய்யப்பட்டமையைக் கண்டித்து, அவர், நேற்று (01) விடுத்திருந்த ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இந்த அரசாங்கத்தினுடைய சிங்கள-பௌத்த மேலாதிக்க சிந்தனையை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு குடும்ப ஆட்சியை உருவாக்கக்கூடிய வகையிலும் அந்த குடும்ப ஆட்சியினூடாக சர்வாதிகார ஆட்சியை நிலைநிறுத்தக்கூடிய வகையிலும் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றதெனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்துக்கொண்டு, அரசமைப்பின் 19ஆவது மற்றும் 13ஆவது திருத்தத்தைத் திருத்துவதற்கு முயற்சிக்கும் அரசாங்கம், 20ஆவது திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முயற்சிக்கும் அரசாங்கம், சிறுபான்மைத் தேசிய இனங்களை அழித்தொழிக்கும் அடிப்படையிலும் அவர்களின் இருப்புக்களைக் கேள்விக்குள்ளாக்கும் அடிப்படையிலுமே சில செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது” என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில், தொல்பொருள் சின்னங்களை அடையாளமிடுவதற்கும் பாதுகாப்பதற்கும் முழுக்க முழுக்க பௌத்த - சிங்கள மேலாதிக்க சிந்தனையில் மூழ்கித் திளைக்கின்ற அதிகாரிகளை உள்ளடக்கிய ஜனாதிபதி செயலணியை உருவாக்கியுள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், வடக்கு மாகாணத்தில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை என்ற அடிப்படையில் தமிழ் மக்களின் காணிகளைச் சுவீகரிப்பதும் அதேபோன்று படையினர் தமிழ் மக்களுக்கு உரித்தான காணிகளைப் பலாத்காரமாகப் பறித்து வருவதும் இங்கு குறிப்பிட வேண்டிய விடயங்களாகுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“தமிழ் மக்கள் தமது உயிர்ப் பாதுகாப்புக்கு அச்சப்படுவதற்கும் மேலாக, தமது வாழ்வாதாரங்கள், காணிகள், நிலங்கள் அனைத்தும் அவர்களின் கைகளைவிட்டுப் பறிக்கப்படும் ஓர் அச்சசூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள். இவற்றுக்கு எதிராகக் குரல்கொடுக்கக்கூடிய எவரும் தமிழ் இனவாதிகள் என்றும் பிரிவினைவாதிகள் என்றும் பிரபாகரனின் வாரிசுகள் என்றும் முத்திரை குத்தப்படுகின்றார்கள்” என, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஒரே நாடு- ஒரே சட்டம்” என்று பேசுபவர்கள், இந்த நாட்டில் பல்வேறுபட்ட தேசிய இனங்கள் இருக்கின்றன. அவர்களுக்கான மத, கலாசார, பண்பாட்டு அடையாளங்கள் இருக்கின்றன என்பதுடன், அம்மக்களுக்கான பாரம்பரியம் மிக்க தேச வழமைச் சட்டங்களும் அவர்களது மத விழுமியங்களைக் காப்பதற்கான சட்டதிட்டங்களும் இருந்து வருகின்றன. அவை பாதுகாக்கப்பட வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், எதேச்சதிகாரமாக நடப்பது, இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் மேலும் மேலும் விரிசல்களை உருவாக்குவதற்கே சாதகமாக அமையுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘இழுத்தெடுக்கும் செய்தி பொய்’

மாநகர சபையின் உறுப்பினர்களில் பெரும்பாலானோர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் அணியில் இருப்பதனால் அவர்களில் சிலரை தமது பக்கம் கொண்டுவரும் முயற்சியில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செல்வராஜா கஜேந்திரன் இருவரும் ஈடுபட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

அந்தச் செய்தி தொடர்பில், அவரிடம் நேற்று (01) வினவியபோதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேர்தல் முடிவடைந்த கையோடு சட்டத்தரணி வி. மணிவண்ணனை, அவரது பதவி நிலைகளிலிருந்து அந்தக் கட்சியின் தலைமை நீக்கியது. அதனையடுத்து, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் சட்டத்தரணி மணிவண்ணனுக்கு ஆதரவாக உள்ளனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் அங்கம் வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்களை நீக்குவதற்கு தேர்தல் ஆணைக்குழுவின் ஆலோசனையை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை நாடியுள்ளது என்று, அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# தொழில் வழங்குதல் இன்று முதல் ஆரம்பம்

அறிவித்துள்ள ஊடகப்பிரிவு கீழ்வரும் தகைமைகளின் அடிப்படையில் தொழில் வாய்ப்பு வழங்கப்படுமென அறிவித்துள்ளது.

1.எவ்வித கல்வித் தகைமையும் இல்லாத அல்லது க.பொ.த சாதாரண தரத்தை விடவும் குறைந்த கல்வி நிலையில் உள்ளவர்களும் பயற்சி பெறாதவர்களும்.

2.விண்ணப்பம் கோரப்படும் தினத்தில் 18 வயதுக்கு குறைவாகவும் 45 ஐ விட அதிகமாகவும் இல்லாது இருத்தல்.

3.சமூர்த்தி நிவாரணம் பெறுவதற்கு தகுதி இருந்தும் பெறாத குடும்பத்தின் தொழிலற்ற உறுப்பினராக இருத்தல் அல்லது சமூர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பத்தில் தொழிலற்ற உறுப்பினராக இருத்தல்.

4.வயது முதிர்ந்த, நோயாளியான பெற்றோர் அல்லது ஊனமுற்ற உறுப்பினரைக் கொண்ட குடும்பத்தில் உறுப்பினராக இருத்தல்.

5.விண்ணப்பிக்கும் பிரதேசத்தில் நிலையான வசிப்பிடத்தை கொண்டவர்.

### பயிற்சிக்காக தெரிவு செய்தல்.

1.ஒரு குடும்பத்தில் மேலே குறிப்பிடப்பட்ட தகுதிகளைக் கொண்ட ஒரு விண்ணப்பதாரி மாத்திரம் கவனத்தில் எடுக்கப்படும்.

2.விண்ணப்பதாரிகள் வசிக்கும் பிரதேசங்களில் நிலவுகின்ற தொழில் வாய்ப்புக்கள் மற்றும் விண்ணப்பதாரி கேட்டுள்ள பயிற்சி துறைகள் அனைத்தையும் கவனத்தில் எடுத்து, குறித்த தொழில் பயிற்சிக்கான தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

3.தாம் வசித்துவரும் பிரதேசத்தில் அல்லது அதற்கு அருகில் உள்ள பயிற்சி நிலையங்களில் பயிற்சி வழங்கப்படும்.

4.சிறப்பான பயற்சியின் பின்னர் வசிக்கும் பிரதேசத்தில் அல்லது அருகில் உள்ள பிரதேசத்தில் தொழில் வழங்கப்படும்.

### சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்

1.ஆறு மாதகால தொடர் பயிற்சி காலத்தில் மாதம் ஒன்றுக்கு 22,500 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்படும்.

2.சிறப்பான பயிற்சியை முடித்த பின்னர் தாம் பயிற்சி பெற்ற துறையில் தமது நிலையான வதிவிட பிரதேசத்தில் அரசு அனுமதி பெற்ற ஆரம்ப திறன் சாரா சம்பளம் (PL-I) (35,000 ரூபாய்) மற்றும் கொடுப்பனவுகளைக் கொண்ட அரசின் நிலையான பணிக்கு நியமிக்கப்படுவதற்கு பயிற்சி பெற்றவர்களுக்கு சந்தர்ப்பம் உண்டு.

இதேவேளை, 10 வருடகால சிறப்பான தொடர் சேவை காலத்தை நிறைவு செய்ததன் பின்னர் அரசின் ஓய்வூதியம் வழங்கப்படும்மென அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த துறைகளுக்கான தொழில் வழங்குதல் மேலே குறிப்பிடப்பட்ட வரையறைகளுக்குள் மாத்திரம் இடம்பெறுமென அறிவித்துள்ளது.

# சொக்கா மல்லி விவகாரம்; திருவுளச்சீட்டுக்கு முஸ்தீபு

பெரமுனவின் சார்பில் போட்டியிட்ட பிரேமலால் ஜயசேகர 104,237 வாக்குகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

அவ்வணியில் எட்டாவதாக இருக்கும் ஜோன் செனவிரட்ன 61,612 வாக்குகளைப் பெற்றுக்கொண்டார். அந்தப் பட்டியலில் ஒன்பதாவதாக இருக்கும் சனீ ரோஹன கொடித்துவக்கு மற்றும் சஞ்ஜீவ பண்டார ஆகிய இருவரும் 53,261 வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர்.

பிரேமலால் ஜயசேகர எம்.பியாக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அவருக்குப் பதிலாக புதிய ஒருவரை நியமிக்கவேண்டிய நிலைமை ஏற்படுமாயின், திருவுளச்சீட்டை பயன்படுத்தி அல்லது நாணயத்தை சுண்டிவிட்டு, அவருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு தேர்தல் ஆணைக்குழு ஆலோசித்துவருவதாக அறியமுடிகின்றது.

மரண தண்டனை கைதியான சொக்கா மல்லி என்றழைக்கப்படும் பிரேமலால் ஜயசேகர, நாடாளுமன்ற உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளமுடியாது என சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார். எனினும், நாடாளுமன்றத்துக்கு அவரை அழைத்துவருமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சிறைச்சாலை திணைக்கள அதிகாரிகளுக்கு பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழை அழிக்க ஆலோசனை?

இந்நிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணியில், ஓர் இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் “தமிழ்” இருப்பதனால், கூட்டணியின் பெயரிலிருந்து தமிழை அகற்றிவிட்டு, புதிய பெயரை வைப்பதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக, தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓர் இனத்தை அல்லது ஒரு மதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பெயர்களைக் கொண்டிருக்கும் கட்சிகளைப் பதிவு செய்வதில் சிக்கல்கள் ஏற்படும். அதனை கருத்திற்கொண்டே, “தமிழை” இல்லாமல் செய்து, புதிய கட்சியொன்றைப் பதிவதற்கு, கூட்டணி ஆலோசித்து வருவதாக அறியமுடிகின்றது.

இதேவேளை, ஓகஸ்ட் 20ஆம் திகதியன்று, நாடாளுமன்றத்தின் முதல் அமர்வின் போது, புதிய சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவை வாழ்த்தி, உரையாற்றிய யாழ்.மாவட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், “உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ். இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ்” என விழித்து, தனதுரையைத் தொடர்ந்திருந்தார். அதற்கு எதிராக நாடாளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் ஆளும் கட்சியினரும் எதிரணியினரும் குரல் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசு மரியாதையுடன் தகனம்

அவருக்கு கொரோனா தொற்றியிருந்தமையால், சுகாதார வழிகாட்டல் நெறிமுறைகளுடன் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக, ஓகஸ்ட் 31ஆம் திகதி முதல் செப்டெம்பர் 06ஆம் திகதி வரையில் ஏழு நாள்கள் தேசிய துக்கதினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கொழும்பு - 03, காலி வீதி, இலக்கம் 36-38 இல் அமைந்துள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயத்தில், இன்றும் (02) நாளையும் (03) காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை அனுதாபப் பதிவேடொன்றும் வைக்கப்பட்டிருக்குமென, கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

2012 ஜூலை 25ஆம் திகதி முதல் 2017 ஜூலை 25ஆம் திகதி வரை இந்தியாவின் 13ஆவது ஜனாதிபதியாக ஸ்ரீ பிரணாப் முகர்ஜி சேவையாற்றியிருந்தார். ஜனாதிபதியாகப் பதவி வகிப்பதற்கு முன்னதாக பாதுகாப்பு, வர்த்தகம், வெளியுறவு மற்றும் நிதி அமைச்சராக பல தடவைகள் அவர் சேவைபுரிந்துள்ளார். ஏழு தடவைகள் நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த ஸ்ரீ பிரணாப் முகர்ஜிக்கு இந்திய குடிமக்கள் உயரிய விருதான பாரத ரத்னா விருது 2019ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்குச்சந்தை டிஜிட்டல் மயம்

முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

டிஜிட்டல் செயன்முறையை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அன்றையதினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார் என, ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொவிட் -19 காரணமாக, கொழும்பு பங்குச் சந்தை 52 நாள்களாக முடங்கியிருந்தாலும் முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பங்குச் சந்தை செயல்முறையானது உலகில் ஒரு புதிய கட்டத்துக்குள் நுழைகிறது என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது, பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணையத்தின் தலைவர் விராஜ் தயாரத்ன, பணிப்பாளர் நாயகம் சிந்தக மெண்டிஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு பங்குச்சந்தை மூலம் உலகை கையாள்வதில் நாட்டின் எதிர்கால வளர்ச்சி செயல்முறைகளையும் வசதியாகவும் திறமையாகவும் சேவையை வழங்குவதே, தங்களுடைய முக்கியமான நோக்கமாகுமென, அவ்விருவரும் தெரிவித்துள்ளனர்.

# சு.கவின் 69ஆவது ஆண்டுவிழா இன்று

அதில், கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, சுதந்திரக் கட்சியின் சார்பில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களாகப் பதவியேற்றிருக்கும் உறுப்பினர்களும் பங்கேற்பர் என, சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கட்சியின் தலைமை பொறுப்பிலிருந்த போது எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டதென்று, விசேட அறிக்கையொன்றை விடுத்து தெரிவித்துள்ள கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், கை சின்னத்தில் தனித்துப் போட்டியிட்டு வெற்றியீட்டியமை வரலாற்று வெற்றியாகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

பொதுத் தேர்தலின் ஊடாக நாடாளுமன்றத்துக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் 14 உறுப்பினர்கள் அனுப்பி வைத்தமைக்கு தனது நன்றியை தெரிவித்துள்ள மைத்திரிபால சிறிசேன, இனத்தின் அடையாளத்துக்காகவும் நாளைக்கு பிறக்கும் குழந்தைகளுக்காகவும் சுதந்திரக் கட்சி என்றுமே குரல் கொடுக்குமென, அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 18 பெண் கைதிகள் உட்பட 462 கைதிகள் விடுதலை

“சிறிய குற்றங்களுக்காகச் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் கைதிகளுக்கு, சிறைச்சாலையின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஒரு தடவை அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை வழங்கப்படும் பொதுமன்னிப்பின் கீழேயே, மேற்படி கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது” என்றும், ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்தார்.

கொரோனா தொற்று சிறைச்சாலைகளுக்கு வியாபிக்காமல் இருப்பதற்கும் சிறைச்சாலைகளில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை தடுப்பதற்குமே, ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என, சிறைச்சாலைகள் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சிறிய குற்றங்களுக்காகத் தண்டனை அனுபவித்துவரும் 65 வயதுக்கும் மேற்பட்டோருக்கு வழங்கப்பட்டிருக்கும் தண்டனை காலத்தைக் குறைப்பதற்கும் தீரமானிக்கப்பட்டுள்ளதென, சிறைச்சாலைகள் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், மனிதப் படுகொலை, பெண்களுக்கு எதிரான வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம் உள்ளிட்ட கடுமையானக் குற்றங்களில் ஈடுபட்டிருந்த எந்தவொரு சிறைக்கைதிக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படாதென, சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# நீர் பயன்பாட்டில் சிக்கனம் வேண்டும்

குடிநீரை விநியோகிக்கும் பிரதான நீர்த்தேக்கங்களில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உயர்நிலப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகிக்கப்படுவதாக, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இணையத்தள ஆசிரியருக்கு விளக்கமறியல்

அவர், அளுத்கடை, மேலதிக நீதவான் லோஜனி அபேவிக்ரம முன்னிலையில் நேற்று (01) ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போதே, மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட மடிக்கணினி, அலைபேசி ஆகியன, மேலதிக விசாரணைகளுக்காக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தம்வசம் வைத்துக்கொண்டுள்ளனர்.

லங்கா நியுஸ்வெப் என்ற இணையத்தள ஆசிரியரான டெஸ்மன்ட் சதுரங்க டி அல்விஸ், இலங்கை சுயாதீன தொலைக்காட்சி மற்றும் சியத்த எம்.எம். ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 54 பேருக்கு கொரோனா

அனுப்பிவைக்க ப்பட்டுள்ளனர் அதனால், கொரோன வைரஸ், சமூகத்தில் பரவுவதற்கு வாய்ப்பில்லை” என தொற்றுநோய் விஞ்ஞான பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கட்டாரிலிருந்து நாடு திரும்பியவர்களில் 32 பேருக்கு கொரோன தொற்றியிருப்பது நேற்றுமுன்தினம் (31) கண்டறியப்பட்டது. மேலும் 22 பேருக்கு கொரோனா தொற்றியிருப்பது நேற்று (01) இனங்காணப்பட்டதென அறிவித்துள்ள சுகாதார அமைச்சு, கடந்த 24 மணிநேரத்தில், கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 54 ஆகும்.

அத்துடன், பாதுகாப்பு கப்பலில் பணியாற்றியவர்கள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அதில், 37 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருந்தமை கண்டறியப்பட்டது. அதில், இந்திய பிரஜைகள் மூவரும் அடங்குகின்றனர்.

இந்நிலையில், தனிமைப்படுத்தல் மய்யங்களிலிருந்து சுகமடைந்து, 11 பேர் வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். சுகமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2, 879 ஆவர். அத்துடன், இதுவரையிலும் 12 பேர், இலங்கையில் மரணித்துள்ளனர்.

# ‘19இல் உள்ள நல்ல விடயங்களை நீக்கக்கூடாது’



அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள எந்தெந்த விடயங்கள் நீக்கப்படுமென தமக்குத் தெரியாதென்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள நல்ல விடயங்கள் நீக்கப்படக் கூடாதெனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டுக்காக 19ஆவது திருத்தச் சட்டத்தில் ஸ்தாபிக்கப்பட்ட பல நிறுவனங்கள் இருப்பதாகவும் நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக, 19ஆவது திருத்தச் சட்டத்தினூடாகக் கொண்டுவரப்பட்ட நிறுவனங்களை, புதிய அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

தகவலறியும் உரிமைச் சட்டம், மக்கள் ஜனநாயக உரிமையெனவும் கூறிய எதிர்க்கட்சித் தலைவர், 19ஆவது திருத்தச் சட்டத்தால் கொண்டுவரப்பட்ட நாட்டுக்குப் பொருத்தமான நல்ல விடயங்களை இல்லாதொழிக்காது, அவற்றைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளுக்கு எதிர்க்கட்சி என்றவகையில் ஒத்துழைப்பை வழங்குவோமெனவும் கூறினார்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் எந்தெந்த விடயங்கள் நீக்கப்படும், எந்தெந்த விடயங்கள் 20ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளடக்கப்படுமென்பது தனக்குத் தெரியாதெனவும், 19ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள நல்ல விடயங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.

# கொழும்பு அல்டயர் கட்டடத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி





கொழும்பின் மிக உயரமான கட்டடங்களின் வரிசையில் இணைந்துகொள்ளவுள்ள கொழும்பு அல்டயர் கட்டடத்தின் நிர்மாணப் பணிகள், இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளனவெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் நிர்மாணப் பணிகளில் 70 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளதோடு, கொழும்பு 02 பகுதியிலுள்ள பேர வாவிக்கு அருகில் நிர்மாணிக்கப்படுகின்ற வாழ்வியல், வியாபாரச் செயற்பாடுகளுக்கான கட்டடத் தொகுதியாக இது அமைந்துள்ளது.

இந்தக் கட்டடத் தொகுதியை, நேற்று முன்தினம் (31), ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பார்வையிட்டதோடு, இவ்வாறான நிர்மாணப் பணிகள், நாட்டின் மீதான ஈர்ப்பை வலுவூட்டுவதுடன், இதன் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் ஜனவரி மாதமளவில் நிறைவடையுமெனத் தான் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

எம்.பிக்களின் உணவுக்கான செலவு;

## அடுத்த வாரம் சபையில் அறிக்கை சமர்பிக்கப்படும்



நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உணவு வேலைக்காக செலவிடப்படும் தொகை குறித்த அறிக்கையொன்று, அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


ஆளும் தரப்பு, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் முன்வைத்த கோரிக்கையின் பிரகாரமே, இந்த அறிக்கை சமர்பிக்கப்பட உள்ளதெனவும் அதன்படி, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்கவால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கமைய, நாடாளுமன்ற உணவகத்தின் கணக்கியல் பிரிவின் ஊழியர்களால், எம்.பிக்களுக்கு வழங்கப்படும் உணவு தொடர்பான விவரம் குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் உணவு விவகாரம் தொடர்பாக, அண்மையில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான செயலமர்வின் போது சர்ச்சையொன்று ஏற்பட்டிருந்ததோடு, அது தொடர்பான அறிக்கையொன்றை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்பிக்குமாறு, ம் ஆளும், எதிர்த்தரப்பு உறுப்பினர்கள், சபாநாயரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

எம்.பி ஒருவரின் ஒருநேர உணவு வேலைக்காக, 3,000 ரூபாய் ஒதுக்கபடுவதாக, நாடாளுமன்ற ஊழியர் ஒருவர் கூறியதாக செய்தி வெளியான நிலையிலேயே இவ்வாறான சர்ச்சைகள் தோன்றியுள்ளன.

கண்டியில் உணரப்பட்ட

## அதிர்வை ஆராய புதிய குழு



கண்டியின் சில பிரதேசங்களில், ஒகஸ்ட் 29ஆம் திகதி உணரப்பட்ட வெடிப்புச் சத்தத்துடன் கூடிய அதிர்வு தொடர்பில் ஆய்வு செய்வதற்காக, புவியல் ஆய்வு, சுரங்கப் பணிகயத்தின் ஆய்வுக்குழுவொன்று, நேற்று (01) கண்டியில் பரிசோதனைகளை ஆரம்பித்திருந்ததென, பொறியியலாளர் சர்ஜன டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவில், புவியல் ஆய்வு, சுரங்கப் பணிகளுக்கான செயலணியின் சுனாமா ஆய்வுப் பிரிவின் பிரதானி அறிவியலாளர் நில்மினி தல்தென தலைமையிலான குழுவில், ஆறு பேர் உள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் 30ஆம் திகதியன்று, மூவர் அடங்கிய குழுவொன்று கண்டிக்குச் சென்று ஆய்வுகளை ஆரம்பித்திருந்த நிலையில், அதில் பெற்றப்பட்ட தகவல்களை மய்யப்படுத்தி, பகுப்பாய்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனவெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் ஆராய வேண்டிய அவசியம் தோன்றியுள்ள காரணத்தால், அது குறித்து ஆழமாக ஆராயும் நோக்கில், புதிய குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளதென்றார்.

# ‘கல்வித் திட்டத்தில் மாற்றம் அவசியம்’

மனப்பாடம் செய்துகொள்ளும் பாடத்திட்டங்களுக்குள் மட்டுப்படாமல், தர்க்க அடிப்படையில் அறிவியல் ரீதியான பகுப்பாய்வுத் திறனுடன், சவால்களை வெற்றிகொள்வதற்கு இயலுமையுள்ள மாணவர்களை உருவக்கக்கூடிய கல்வித்திட்டமொன்றை உருவாக்க எதிர்பார்ப்பதாக, கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான பாடத்திட்டத்தில் மாற்றம் செய்வதற்கான ஜனாதிபதிச் செயலணி உறுப்பினர்ளுடனான சந்திப்பின் போது தொடர்ந்துரைத்த அவர், பாடத்திட்ட மறுசீரமைப்பு, உத்தேச அமைச்சரவைப் பத்திரத்திலும் புதிய பாடத்திட்டத்தின் உள்ளீடுகள், அதனைக் கற்பிக்கும் முறைமைகள் தொடர்பில் பெரும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளனவெனவும் தெரிவித்தார்.

அத்தோடு, தொழிற்றிறன், தொழில்நுட்ப அடிப்படையில் பயணிப்பதற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அமைச்சர் எடுத்துரைத்ததோடு, தேசிய கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

எதிர்காலக் கல்வித் திட்டங்கள் தொடர்பாக ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ள தனியார் தரப்புகளை ஒழுங்குபடுத்தல், உயர்க்கல்வி, தொழிற்கல்வி தொடர்பாக, வலய மட்டத்தில் தேடிப்பார்ப்பதற்கான குழுக்களை நிறுவுதல், அந்தக் குழுக்களின் செயற்பாடுகளை வெற்றியடையச் செய்யும் நோக்கில், அவற்றுக்கான வழிகாட்டல்களை வழங்குதல் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

தற்காலத்தில் காணப்படும் கல்வித் திட்டத்தின் ஊடாக, மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் கல்விக்கும் நாட்டில் காணப்படும் வேலைவாய்ப்புகளுக்கும் இடையில் பெரும் இடைவெளியொன்று காணப்படுவதாக, கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியதை அடுத்து, உயர்தரத்துக்குத் தோற்றிய மாணவர்கள், பல்கலைக்கழக பிரவேசத்துக்காக நீண்ட காலம் காத்திருக்கும் நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தார். இவற்றைக் கருத்திற்கொண்டு, நுட்பமான தொழில்முறைகளுக்கு அவசியமான வகையில் கல்வித் திட்டத்தை ஒழுங்கமைப்பதும் கல்வி முறைமைக்குள் மாற்றத்தை ஏற்படுத்துவதும் அவசியமெனத் தெரிவித்த கல்வி அமைச்சர், அது தொடர்பான பெரும் பொறுப்பு ஜனாதிபதி செயலணியை சார்ந்துள்ளதென்றார்.
டிக்காட்டினார்.

ஹம்பாந்தோட்டையில்

## டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் பேச்சுவார்த்தை

இலங்கைத் தொழிற்சாலைகளின் அபிவிருத்தி தொடர்பான பேச்சுவார்த்தையொன்று, அமைச்சர் விமல் வீரவன்சவுக்கும் ஹம்பாந்தோட்டை துறைமுக அதிகாரிகளுக்கிடையிலும், கொழும்பு 3இல் உள்ள தொழிற்சாலைகள் அமைச்சில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கையின் தொழிற்சாலைகளை மேம்படுத்துவதற்காக, HIPG நிறுவனத்தின் பரிந்துரைகள் அடங்கிய ஆவணமொன்றும் அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அத்தோடு, எதிர்காலத்தில் ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு அருகில் நிறுவப்படவுள்ள 280 ஹெக்டெயர் தொழிற்சாலை வலயம் தொடர்பாகவும் பேசப்பட்டது.

இதன்போது, HIPG நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியான ரே ரொன், இந்தத் தொழில் வலயத்தில் முதல் கட்டமாக டயர் உற்பத்தித் தொழிற்சாலையொன்று ஆரம்பிக்கபட உள்ளதெனவும் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, அந்தப் பகுதியை அண்மித்தவர்களுக்கு, அந்தத் தொழிற்சாலைக்குள் 2,000 தொழில் வாய்ப்புகளை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தொழிற்சாலைக்கு அவசியமான சகலவிதமான மூலப்பொருள்களையும், இலங்கையிலிருந்தே பெற எதிர்பார்ப்பதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

பிரணாப் முகர்ஜியின் மறைவுக்கு

## ரணிலும் மைத்திரியும் இரங்கல்



வலய அரசியல் செயற்பாடுகள் தொடர்பான பெரும் தெரிவுகொண்டவரும் சிரேஷ்ட அரச நிர்வாகியுமான முன்னாள் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மறைவு வருத்தமளிப்பதாக, ஐக்கிய தேசிய கட்சியின் இரங்கல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தனது தாய்நாட்டுக்குச் செய்த சேவைகளுக்காக, பத்ம விபூஷன், பாரத ரத்னா உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ள பிரணாப், அந்நாட்டின் முக்கிய பொறுப்புகளில் இருந்த போதும் இந்திய ஜனாதிபதியான போதும், இலங்கையுடன் பேணிய நட்புறவுகளையும் அக்கட்சி நினைவு கூர்ந்துள்ளது.

அத்தோடு, தனிப்பட்ட வகையில் தன்னுடனும் தனது பாரியாரான பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்கவுடனும் நட்புறவைப் பேணியதாக தெரிவித்துள்ள ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிமரசிங்க, தங்களது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

# ‘பிரணாப் முகர்ஜியின் மறைவு வருத்தமளிக்கிறது’



இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மறைவுச் செய்தி வருத்தமளிப்பதாக, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் குறிப்பில், கல்லூரிப் பேராசிரியராக இருந்த பிரணாப் முகர்ஜியை, இலங்கைத் தமிழ் மக்களின் நலனுக்காகச் சந்தித்துக்கு கலந்துரையாடிய தருணங்கள் என்றும் மறக்க முடியாதவை என்று குறிப்பிட்டுள்ளார்.

மருத்துவமனையில் இருந்து வந்த அவரது மறைவுச் செய்தி கேட்டு வருத்தம் அடைந்ததோடு, பிரணாப் முகர்ஜியை இழந்து வாடும் அவருடைய குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதாகவும், செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் சபையின்

# உப தலைவராக ஜயந்த தர்மதாச தெரிவு

இலங்கைக் கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவிக்குக்கு, பேராசிரியர் ஜயந்த தர்மதாச தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கிரிக்கெட் சபையில் இடம்பெற்ற விஷேட பொதுச் சபை அமர்வில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் அனைவரும், அவருடைய நியமனத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிரிக்கெட் சபையின் உப தலைவர் பதவியை, கே.மதிவானன் இராஜினாமா செய்திருந்ததையடுத்தே, பேராசிரியர் ஜயந்த தர்தமதாச தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘கஞ்சா விற்றபனைச் செய்த தம்பதிகள் கைது’

இரண்டரை வயதுக் குழந்தையுடன், மோட்டார் சைக்கிளொன்றில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட தம்பதியனரை, கட்டுகஸ்தோட்டை போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர், நேற்று (01) கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி, சந்தேகநபர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளைச் சோதனையிட்ட போதே சிக்கியுள்ளனர். மோட்டார் சைக்கிளில் இருந்த மனைவி, கஞ்சாவை விழுங்கிருந்தார் எனவும் இவர்கள், 10,000 மில்லி கிராம் கஞ்சாவுடன் பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டனர் என்றும், போதைப் பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.


**பொது மக்களுக்கு வழுங்கப்படும் பொது அறிவித்தல்**
**விசேட அடோர்னி தத்துவ இரத்துச் செய்தல்**

கிராதுருகோட்டை தொழில்துறை வலயம் இல. 01 இல் வசிக்கும் ஹிடிகே முதியன்சேலாகே லிலியன் சுஜாதா குமாரி தெதுனுபிடிய ஆகிய என்னால் கண்டி பிரசித்த நொத்தாரிஸ் டபள்யு. எம். பிரேமரத்ன அவர்களாள் 2019 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 5481 ஆம் இலக்கத்தை கொண்ட அற்றோனித் தத்துவம் என்னால் மொரட்டுவ கந்தபார இல. 10 இல் வசிக்கும் ஹமீந்ர பிரியந்த பிரனாந்து என்பவருக்கு வழுங்கப்பட்ட விசேட அடோர்னி அதிகாரத்தை 2020.08.31 ஆம் திகதி முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டதாக இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.



KÄRCHER

**அறிவித்தல்**

2019 ஜனவரி - 2019 டிசம்பர் வரையான காலப்பகுதியில், இல. 519/1, எல்விடிகல வீதி, கொழும்பு 5 இல் அமைந்துள்ள கார்ச்சர் (Karcher) சேவை நிலையத்தில் பழுதுபார்த்தல் மற்றும் பரிசோதிப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட கார்ச்சர் உபகரணங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.


இவ்வறிவித்தலின் பின் 14 நாட்களுக்குள் மீள பெற்றுக்கொள்ளப்படாத உபகரணங்களுக்கு நாம் எந்த வகையிலும் பொறுப்பாகமாட்டோம்.

**துடவ்வ ட்ரேடிங் கம்பனி (பிரைவட்) லிமிடெட்**

இல. 509/1. எல்விடிகல மாவத்தை வீதி, கொழும்பு 05
தொ.பேசி: 011-2369644, பெக்ஸ்: 011-2369224
மின்னஞ்சல்: Service2@tudawetrading.com

## முல்லைத்தீவில் பேண்தகு விவசாயத்திலான

# வயல் விழாக் கண்காட்சி



■ பல விவசாயிகள், இயந்திரப் பொறிமுறைகளைப் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளார்கள்

■ சிறந்த விளக்கமுறையுடன் அமைந்துள்ள வயல் விழாவாக இது அமைந்திருந்தது








**செ.கீதாஞ்சன்**

முல்லைத்தீவு மாவட்ட விவசாயத் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, நவீன தொழில்நுட்பத்துடனான பேண்தகு விவசாயத்திலான வயல் விழாக் கண்காட்சி, முல்லைத்தீவில் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது.

கடந்த இரண்டு நாள்களாகச் சிறப்புற நடைபெற்ற இந்தக் கண்காட்சியில், 2 ஆயிரத்துக்கும் அதிமான விவசாயிகள், பொதுமக்கள், மாணவர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்கு பற்றி பயனடைந்துள்ளார்கள்.













முல்லைத்தீவு மாவட்டப் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் பி.உகநாதன் தலைமையில், 27ஆம் திகதி வியாழக்கிழமை தொடக்க நிகழ்வில், வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், வடமாகாண நீர்ப்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் வீ.பிரேம்குமார் உள்ளிட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர்கள், இராணுவத்தின் 64ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த கேணல் அதிகாரி, பொலிஸ் அதிகாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள், 28ஆம் திகதி காலை நடைபெற்ற நிலையில், வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சிவபாலசுந்தரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு வயல் விழாக் கண்காட்சியைத் தொடக்கி வைத்ததுடன், விவசாயத் தொழில்நுட்ப வயல் விழா கண்காட்சியையொட்டி, பாடசாலைகளில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றிய மாணவர்களுக்கு, பயன்தரு மரக்கன்றுகள் பரிசாக வழங்கப்பட்டன.

நாட்டின் பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் மாவட்டங்களில் ஒன்றாக, முல்லைத்தீவு மாவட்டம் காணப்படுகின்றது. கடல் வளமும் நில வளமும் கொண்ட இம்மாவட்டத்தில் இருந்து, அதிகளவான கடல் உணவுகள் மற்றும் நெல், நிலக்கடலை ஆகியன, ஆண்டுதோறும் வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

> **குறிப்பாக, பூக்கன்றுகள், காடை முட்டைகள், பழமரக் கன்றுகள், மஞ்சள், இஞ்சி கன்றுகள் என்பன அதிகளவில் விற்பனையாகியுள்ளன**

அதிகளவான பப்பாசி, ஃபெசன்புரூட், மரக்கறி வகைகளும் இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறான உற்பத்திகளுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இல்லாத காரணத்தால், நலிவுற்ற விவசாயிகளாகவே இந்த மாவட்ட விவசாயிகள் காணப்படுகிறார்கள்.

விவசாய நவீனமயப்படுத்தல் ஊடாக, விவசாயிகளை ஊக்குவித்து, அவர்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை, இன்றைய அரசாங்கத்துக்கு உள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில், 200க்கும் மேற்பட்ட குளங்கள் காணப்படுகின்றன. சரியான நீர் முகாமைத்துவத்தை வழங்கி, விவசாயச் செய்கையை ஊக்குவிக்க வேண்டிய தேவை, இன்றைய காலகட்டத்தில் காணப்படுகின்றது.

நவீனமயப்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களை, விவசாயச் செய்கையில் புகுத்துவதன் ஊடாக, விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேலும் விருத்திசெய்ய முடியும். காலநிலை மாற்றத்தாலும் அதாவது ஈரவலயப் பிரதேசங்களில் செய்கை பண்ணப்படும் கோவா, கெரட், லீக்ஸ், உருளைக்கிழங்கு, வெற்றிலை போன்றன, இந்த வயல் விழாவில் சிறப்பாகச் செய்கை பண்ணப்பட்டுள்ளன.

உலர் வலயத்தில் உள்ள மாவட்டங்களிலும், இவற்றைச் செய்கை பண்ண முடியும் என்பதையும் குறைந்த செலவிலான பூச்சிய சக்திப் பயன்பாடு கொண்ட இயற்கையான குளிரூட்டி அறை மூலம், மரக்கறிகள், பழங்களைச் சேமிக்க முடியும் எனவும், பண்ணை முகாமையாளர் கி.கீர்த்திகன் எடுத்துக் காட்டியுள்ளார்.

நெல் இயந்திரம் மூலம் நடுகை, களை கட்டுப்பாடு, மரக்கறி, தானியங்கள், அவரைப் பயிர்கள், நாற்றுமேடை உற்பத்தி, புதினா எனப் பலதரப்பட்ட பயிர்களும் செய்கை பண்ணிய விவசாயப் பண்ணையாக, முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் விவசாயப் பயிற்சி நிலையம் காணப்படுகின்றது.

சிறப்பான சேதன வீட்டுத்தோட்டம், காளான் செய்கை, தேனீ வளர்ப்பு, காடை வளர்ப்பு என்பவற்றின் ஊடாக, விவசாயிகள் அதிகளவான நன்மையை அடையலாம் எனவும் அவர்கள் எடுத்தக்காட்டியுள்ளனர். குறிப்பாக, வீட்டில் இருக்கும் பெண்களால் மேற்கொள்ளப்படக்கூடிய ஒன்றாக காளான் வளர்ப்பு காணப்படுகின்றது.

கால்நடை வளர்ப்பில், முயல், கோழி, காடை, மாடு, வாத்து போன்ற வளர்ப்புகள் எடுத்துக்காட்டப்பட்டாலும், அவற்றுக்கான இயற்கை வழித் தீவனங்கள் எவ்வாறு தயாரிக்கலாம் மற்றும் அசோலா செய்கை அவற்றின் ஊட்டச்சத்து செரிமானங்களின் அளவுகள் என்பன விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

பல உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் இதன்போது வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பூக்கன்றுகள், காடை முட்டைகள், பழமரக் கன்றுகள், மஞ்சள், இஞ்சி கன்றுகள் என்பன அதிகளவில் விற்பனையாகியுள்ளன.

இதில் குறிப்பாக, பாடசாலை மாணவர்கள் தங்கள் பாடசாலைகளில் காணமுடியாத செயன்முறைகளை விவசாயம், விஞ்ஞான பாடங்களுக்கான செயன்முறைகளைப் பார்வையிட்டுக் குறிப்பெடுத்துச் சென்றுள்ளார்கள். அதிகளவில் பாடசாலை மாணவர்களைப் பார்வையிட்டுள்ளமை சிறப்பாக அமைந்துள்ளது.

உலர் வலயத்தில் உள்ள மாவட்டங்களில், வெப்பநிலை கூடிய மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் காணப்பட்டாலும், அந்த வெப்பநிலைக்கு ஏற்றவாறு தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, எவ்வாறு விவசாயத்தில் உற்பத்தித் திறனை மேம்படுத்தி அதன் ஊடாகச் சிறந்த பொருளாதார வசதிகள் கொண்ட விவசாயிகளாக மாறலாம் என்பதைச் சித்தரித்து நிற்கின்ற வயல் விழாவாக, இந்த வயல் விழா அமைந்துள்ளது.

> **பல உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் வாய்ப்பும் இதன்போது வழங்கப்பட்டுள்ளது**

போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாகக் காணப்படும் முல்லைத்தீவில், இத்தனை விவசாய உற்பத்திந் சிறப்புகள் உள்ளனவா என்ற கேள்வி, பார்ப்பவர்கள் மத்தியில் காணப்படுகின்றது.

பல விவசாயிகள், இயந்திரப் பொறிமுறைகளைப் பார்வையிட்டுப் பயனடைந்துள்ளார்கள். நிலக்கடலை பிரிக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள் எனத் தொழில்நுட்பங்கள் காணப்பட்டாலும், கண்காட்சியில் உள்ளூர் விவசாயிகளின் தயாரிப்பில் உருவான புல்செருக்கும் மற்றும் மண்அணைக்கும் இயந்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சரியான தொழில்நுட்ப உதவிகளையும் பொருளாதார உதவிகளையும் விவசாயிகளுக்கு வழங்குவதன் ஊடாக, விவசாயிகளின் பொருளாதாரத்தை பலப்படுத்த வேண்டிய தேவை இன்று உள்ளது. உலக நாடுகளின் இறக்குமதி பொருளாதாரத்தில் நாங்கள் தங்கியிராது, வீட்டுத்தோட்டங்கள் என ஒவ்வொரு குடிமகனும் விவசாயியாக மாறவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்ட விவசாயப் பயிற்சிப் பண்ணை முகாமையாளர் கி.கீர்த்திகனின் சிறந்த முகாமைத்துவத்தின் கீழ், துண்டங்களாகப் பிரிக்கப்பட்டு, சிறந்த விளக்கமுறையுடன் அமைந்துள்ள வயல் விழாவாக இது அமைந்திருந்தது.

ஒட்டுசுட்டான் பிரதேசம், முல்லைத்தீவு மாவட்டத்தின் விவசாய மய்யப் பகுதியில் அமைந்து உள்ளமையால், மாவட்டத்தில் உள்ள விவசாயிகளும் விவசாயப் பாடத்தைக் கற்கும் மாணவர்களும், தங்கள் செயன்முறைகளையும் உற்பத்தி தொடர்பான சந்தேகங்கள், சந்தைப்படுத்தல், புதிய தொழில்நுட்பங்களையும் என்றும் கற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இருந்தால், எதிர்காலத்தில் வளமிக்க சாலச்சிறந்த பண்ணையாக இது அமையும்.

சிறு தோட்டங்கள், சிறு முயற்சிகள் ஊடாக, எங்கள் பொருளாதாரத்தை நாங்களே பலப்படுத்த வேண்டிய காலகட்டத்தில் நிற்கின்றோம். நீர்வளம் உண்டு; நிலவளம் உண்டு. அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்தி, ஒவ்வொரு குடும்பமும் தன்னிறைவான பொருளாதா உற்பத்திக்கு வழிவகுக்குமானால், எங்கள் நாடு ஏனைய நாட்டில் தங்கியிராமல், நிறைவான பொருளாதரத்துடன் தலைநிமிரும் என்பது திண்ணம்!









உமிரியில்

# மீண்டும் இல்மனைற் அகழ்வு முயற்சி?

## தீக்குளிப்போமென மக்கள் எச்சரிக்கை



சகா

இல்மனைற் அகழ்வதற்காக, அம்பாறை - திருக்கோவில், உமிரி பிரதேசத்துக்கு, நேற்று முன்தினம் (31) அதிகாரிகள் சிலர் மீண்டும் களவிஜயமொன்றை மேற்கொண்டனர்.

இதனால், அப்பகுதியை முற்றுகையிட்ட மக்கள், தங்களது எதிர்ப்பை வெளியிட்டதையடுத்து, அப்பகுதியில் பதற்றமான நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில், மேலும் தெரியவருவதாவது,

அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர் வே.ஜெகதீசன், திருக்கோவில் பிரதேசச் செயலாளர் த.கஜேந்திரன், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம், கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், கடல்வளச் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திணைக்களம், வனவளப்பரிபாலனத் திணைக்களம், புவிச்சரிதவியல், அளவை, சுரங்கங்கள் பணியகத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களின் உயரதிகாரிகள், இல்மனைற் அகழ்வுக்குப் பொறுப்பான தம்சிலா எக்ஸ்போர்ட் கம்பனியின் நிர்வாகிகள், கடற்படையினர் ஆகியோர், நேற்று முன்தினம் (31) காலை 9 மணியளவில் உமிரிப் பகுதிக்கு, 9 வாகனங்களில் வந்திறங்கினர்.

இதையறிந்த திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.டப்ள்யூ. கமலராஜனும் பொதுமக்களும், அப்பகுதிக்கு வந்து, தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இதன்போது வருகை தந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடிய திருக்கோவில் பிரதேச சபைத் தவிசாளர் ஏ.டப்ளியூ.கமலராஜன், “கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர், இதற்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, இத்திட்டம் கைவிடப்பட்டது” என்றார்.

“அத்துடன், பிரதேச சபையில், திருக்கோவில் பிராந்தியத்தில் இல்மனைற் அகழ்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது” எனவும் கூறினார்.

கடந்த வருடம் கொழும்பில், கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கூட்டத்தில், இதற்கு தான் எதிர்ப்புத் தெரிவித்ததை அடுத்து, இந்த விவகாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டதெனவும், தவிசாளர் கூறினார்.

இந்நிலையில், தனக்குத் தெரியாமலும் மக்களுக்கு அறிவிக்காமலும், மீண்டும் இப்பகுதிக்கு வந்து, இல்மனைற் அகழ முயற்சிக்கப்படுவதாகவும், தவிசாளர் சாடினார்.

அதனிடையே அங்கு வந்த பொதுமக்கள், இல்மனைற் அகழ்ந்தால் தமது பகுதியில் உள்ள நிலத்தடிநீர் உவர்நீராகுமெனவும் இங்குள்ள தென்னை மரங்கள் தொடக்கம் சகல பயிர்களும் கருகுமெனவும் சுட்டிக்காட்டினர்.

“இங்கு இல்மனைற் அகழவேண்டாம். அதை மீறிச் செய்ய முற்பட்டால், தாம் தீக்குளிப்போம்” எனவும், அப்பகுதி மக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து கருத்துரைத்த மாவட்ட மேலதிகச் செயலாளர் வே.ஜெகதீசன், இங்குள்ள மக்களின் சம்மதம் இல்லாமல் இங்கு எதுவும் நடக்காதெனவும் இது ஒரு களவிஜயம் மட்டுமே எனவும் கூறினார்.

இதற்கான அறிக்கைகளைத் தாம் தனித்தனியாக அனுப்ப வேண்டுமெனத் தெரிவித்த அவர், அதன்பிறகுதான் முடிவெடுக்கப்படுமெனவும் உங்களது எதிர்ப்பைக் கட்டாயம் தாம் தெரிவிப்போமெனவும் கூறினார்.

மாவட்ட மேலதிகச் செயலாளரின் கருத்தை அடுத்து, அப்பகுதியில் இருந்து மக்கள் களைந்து சென்றனர்.

இந்த இல்மனைற் அகழும் திட்டத்தின் கீழ், அம்பாறைக் கரையோரத்தில், 46 கிலோமீற்றர் தூரமுள்ள ஒலுவில் தொடக்கம் உமிரி வரை, இன்மனைற் அகழப்படவுள்ளது. அதன் முதற்கட்டமாக உமிரியில் 0.6 கிலோமீற்றர் தூரம் அகழ்வதற்கான கள விஜயமே, இதுவெனத் தெரியவருகிறது.

இறக்குமதி செய்யப்படும் பிளாஸ்டிக் பொருள்களுக்கு

# ‘தடை விதிக்க நடவடிக்கை’



பிளாஸ்டிக் பொருள்களை இறக்குமதி செய்வதற்கு, அரசாங்கம் தடை விதிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, சுற்றாடல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே, இத்தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் கூறினார்.

தடை செய்யப்பட வேண்டிய பொருள்களில், பிளாஸ்டிக் கோப்பைகள், பிளாஸ்டிக் கரண்டிகள் உள்ளிட்டவை உள்ளடங்குகின்றனவெனத் தெரிவித்த அவர், இது தவிர, சில அலுமினியப் பொருள்கள் மற்றும் பொலித்தீன் பொருள்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கும் தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

சீனா, இந்தியா, இந்தோனேசியா, தாய்வான் ஆகிய நாடுகளில் இருந்தே, பெரும்பாலான பிளாஸ்டிக் பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகின்றனவெனவும், மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்துடன், பிளாடிக் பொருள்கள் இறக்குமதி மீதான தடை தொடர்பில், அமைச்சரவைக்குத் தெரிவிக்கப்படுமென்றும், அவர் கூறினார்.

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களில்

# ‘2,000 பேரில் 52 பேர் உயிரிழப்பு’

வெளிநாடுகளில் பணியாற்றும் இலங்கைத் தொழிலாளர்களில் சுமார் 2,000 பேர், கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு இலக்காகியுள்ளனரெனத் தெரிவித்த வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய, அவர்களில் 400 பேர் வரையில், இத்தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனரெனவும் கூறினார்.

அத்துடன், தொற்றுக்குள்ளாகியிருந்த 52 இலங்கைத் தொழிலாளர்கள் உயிரிழந்துள்ளரெனவும், அவர் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், 16 நாடுகளிலிருந்து இந்தத் தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளனவெனத் தெரிவித்தார்.

அத்துடன், கொரியாவில் பணிபுரிந்து வந்த நிலையில், ஒப்பந்தக் காலம் நிறைவடைந்துள்ள இலங்கைத் தொழிலாளர்களுக்கு, அந்நாட்டு விவசாயப் பிரிவில் தொழில் வழங்குவதற்கு, கொரியா அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பழைய இரும்பு

# வியாபாரியைக் காணவில்லை

ஏ.எச்.ஏ. ஹூஸைன்



பழைய இரும்புப் பொருள்களைச் சேகரித்து விற்பனை செய்யும் வியாபாரி ஒருவரைக் காணவில்லையென்று, ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் - மீராகேணி, மய்யித்துப்பிட்டி, சமூர்த்தி வீதியைச் சேர்ந்த நெய்னா முகம்மது நூகுலெப்பை (வயது 52) எனும் 5 பிள்ளைகளின் தந்தையே, இவ்வாறு காணாமல் போயுள்ளரென, பொலிஸார் கூறினர்.

ஞாயிற்றுக்கிழமை (30) அதிகாலை 5 மணியளவில், பழைய இரும்புப் பொருள்களை வாங்கி வருவதற்காக, 30,000 ரூபாய் பணத்துடன் வீட்டை விட்டுச் சென்றவர், இன்று வரை வீட்டுக்குத் திரும்பவில்லையென, காணாமற்போனவரின் மனைவி, தனது முறைப்பாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தனது கணவர் பயணித்த படி ரக வாகனம், சேதமாக்கப்பட்டு, அதன் பற்றரி கழற்றப்பட்ட நிலையில், சவுக்கடி வீதியில் இருந்து, நேற்று முன்தினம் (31) மீட்கப்பட்டதாகவும், அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், ஏறாவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறுவர்களைச் சிறையில் அடைத்தால்

# ‘போதைப்பொருள் கடத்தல்காரர்களாக மாறிவிடுவர்’

போதைப்பொருள் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்படும் பெரும்பாலான சிறுவர்கள், போதைப்பொருள் கடத்தல்காரர்களாக மாறுவதற்கான வாய்ப்புள்ளதாக, தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் விசேட வைத்தியர் லக்நாத் வெலகெதர தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கடந்த ஆறு மாதங்களில், போதைப்பொருள் குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்ட 52,000 பேரில் கணிசமானவர்கள் சிறுவர்களாவாரென்றார்.

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டை விடுவிப்பதில், தலைமைப் பாதுகாப்பு அதிகாரியும் சுகாதாரச் சேவை அதிகாரிகளும் மிகச் சிறந்த பணிகளை முன்னெடுத்துள்ளனரெனத் தெரிவித்த அவர், ஆனால், நீண்ட காலமாகப் போதைப்பொருள் அச்சுறுத்தலில் உள்ள நாட்டை அவர்களால் காப்பாற்ற முடியவில்லையெனவும் கூறினார்.

கடந்த ஆறு மாதங்களில் மாத்திரம், போதைப்பொருள் விற்பனை செய்தக் குற்றச்சாட்டில், 52,000 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனரெனவும் அவர்களில், ஹெரோய்ன் விற்பனை செய்தக் குற்றச்சாட்டில் 24,000 பேரும் கஞ்சா விற்பனை செய்த குற்றச்சாட்டில் 26,000 பேரும் அடங்குகின்றனெரென, லக்நாத் வெலகெதர தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானோர், 25 - 30 வயதுக்குட்பட்டவர்களெனத் தெரிவித்த அவர், இதில் சுமார் 20 சதவீதமானோர் பாடசாலை மாணவர்களெனவும் கூறினார்.

பாடசாலை மாணவர்களைக் கைதுசெய்து, தடுப்புக் காவலில் வைப்பது பொருத்தமானதல்ல எனத் தெரிவித்த அவர், அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டால், அங்குள்ள அனுபவத்தின் அடிப்படையில், போதைப்பொருள் விற்பனையாளர்களாக மாறிவிடுவார்களெனவும் கூறினார்.

கைதுசெய்யப்பட்ட சிறுவர்களில் சிலர், சிறந்த குடும்பப் பின்னணியையும் சிறந்த கல்வியறிவைக் கொண்டவர்களாகவும் உள்ளனரெனவும், லக்நாத் வெலகெதர தெரிவித்தார்.

பாதுகாப்புப் படையினரால் மட்டும் போதைப் பொருளைக் கட்டுப்படுத்த முடியாதெனவும் ஆகவே, இவை தொடர்பாக கல்வி ஊடாக சிறுவர்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமெனவும், அவர் கூறினார்.



## தேர்த் திருவிழா

வரலாற்றுப் பிரசித்திப்பெற்ற செல்வச்சந்நதி கோவில் தேர்த் திருவிழா, நேற்று (01) நடைபெற்றது. (படப்பிடிப்பு: எஸ்.நிதர்ஷன்)

# திருமலையில் மினிசூறாவளி

## 30க்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

எப்.முபாரக்



திருகோணமலையில், ஞாயிற்றுக்கிழமையும் (30) திங்கட்கிழமையும் (31) வீசிய மினிசூறாவளியால், 30க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளனவென, திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ரொட்டவெவ, அத்தாபெந்திவெவ ஆகிய கிராமங்களில், 18 வீடுகளும் கிண்ணியா பிரதேசத்தில், 5க்கும் மேற்பட்ட வீடுகளும் கந்தளாய் பிரதேசத்தில் சில வீடுகளுமென, மொத்தமாக 30க்கும் மேற்பட்ட வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளனவெனவும் கூறினார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கள விஜயங்களை மேற்கொண்டு விவரங்களைத் திரட்டியதாகத் தெரிவித்த அவர், அதனூடாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும் கூறினார்.

வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவில் மகோற்சம்;

# பாதயாத்திரைகள் முன்னெடுப்பு

அ . அச்சுதன், எம்.எம்.அஹமட் அனாம்



மூதூர் - வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவில் தீர்த்தோற்சவத்தை முன்னிட்டு, திருக்கோணேஸ்வரக் கோவிலில் இருந்து, வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்கு பாதயாத்திரையொன்று, நேற்று (01) காலை முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை - உப்புவெளிசோலை வைரவ கோவில் பாதயாத்திரைக் குழுவினரால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் பாதயாத்திரை, நேற்றுக் காலை 8.30 மணிக்கு, திருக்கோணேஸ்வராக் கோவிலில் இருந்து ஆரம்பமாகியது.

செப்டெம்பர் 8ஆம் திகதியன்று, மூதூர்- வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவில் தீர்த்தோற்சவம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவில் மகோற்சவத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில், நேற்று (01) காலை, ஆன்மீகப் பாதயாத்திரையொன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.யோகேஸ்வரன் தலைமையில், மண்டூர் கந்தசுவாமி கோவிலில் இருந்து, இந்த ஆன்மீகப் பாதையாத்திரை ஆரம்பமானது.

இந்த யாத்திரை, செப்டெம்பர் 7ஆம் திகதி மாலை, வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோவிலைச் சென்றடையும்.

மன்னாரில் அடைமழை;

# 362 பேர் பாதிப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், நேற்று (01) அதிகாலை பெய்த பலத்த காற்றுடன் கூடிய அடைமழை காரணமாக, 113 குடும்பங்களைச் சேர்ந்த 362 பேர் பாதிக்கப்பட்டுள்ளனரென, மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில், 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேரும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 42 குடும்பங்களைச் சேர்ந்த 146 பேரும், முசலி பிரதேச செயலாளர் பிரிவில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 202 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்கள், இடம்பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ளனரெனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட பிரதேச செயலாளர்கள், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு அதிகாரிகள், மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சுகாஷின் சொதப்பல் சுத்துமாத்து...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில், நேற்றைய ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்ட சட்டத்தரணி சுகாஷ், 'மத்திய குழு விவகாரம்' என்பதை வைத்துக்கொண்டு, முழுக்க முழுக்கச் சுத்துமாத்து கதைகளைக் கட்டவிழ்த்ததைத் காணக்கூடியதாக இருந்தது. ஒரு கட்சி சார்பாக ஊடகச் சந்திப்பில் கலந்துகொண்டுவிட்டு, மத்திய குழுவின் மீது பாரப்படுத்தித் தப்பித்துக்கொள்வது ஏற்புடையதல்ல. ஏனெனில், தங்கள் கட்சி சார்பாக 21 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற மணிவண்ணன் தொடர்பான கேள்விகளுக்கு பதில் சொல்லவேண்டிய கடப்பாடு அவர்களுக்கு இருக்கிறது. அதைவிடுத்து, 'மத்திய குழு விசாரணை முடிவடையும்வரை பொறுமையாக இருங்கள்' என ஊடகவியலாளர்களைச் சொல்வது, எந்தவிதத்தில் நியாயமானது..?

ஆனால், மூச்சுக்கு முப்பது தடவை 'ஊடகங்கள் பிழையான தகவல்களைப் பிரசுரிக்கின்றன' என்ற குற்றச்சாட்டை மாத்திரம் சுகாஷ் முன்வைத்துக் கொள்கிறார். அத்தகைய குற்றச்சாட்டு இருக்குமாக இருந்தால், உண்மை நிலைவரத்தை மக்கள் மத்தியில் வெளிப்படுத்த வேண்டும். அல்லாவிட்டால், விசாரணை நடைபெறுகின்றதென்பதை எடுத்துக்காட்டி, அந்த விசாரணை முடியும் வரை, பதவிகளிலிருந்து மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டிருக்கிறார் என்பதையாவது சொல்லியிருக்கலாம். ஆனால், சுகாஷால் அப்படிச் சொல்ல முடியவில்லை. ஒரு கட்டத்தில், 'கட்சியின் தேசிய அமைப்பாளராக இருந்தவர்..' என்று விழித்திருந்தார். அப்படியென்றால், தற்போது அப்பதவியில் மணிவண்ணன் இல்லை என்றுதானே அர்த்தம்? இத்தகைய குழறுபடிகளுக்கு மத்தியில், கட்சியின் ஜனநாயகம் பற்றிப் பிதற்றுவதில் பிரயோசனமில்லை.

அதுமாத்திரமன்றி, சர்வதேச காணாமலாக்கப்பட்டோர் தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு பற்றியும், சொதப்பலான பதிலையே சுகாஷ் வழங்கியிருந்தார். எவரையும் தாங்கள் பிரித்துப் பார்க்கவில்லை என்று கூறிக்கொண்டு, சில நபர்கள் ஏற்பாடு செய்த நிகழ்வில் மாத்திரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்துகொண்டிருக்கின்றனர். அதற்கான காரணமாக, அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பதை விருபாதமையாலேயே கச்சேரி முன்பாக நடந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என சுகாஷ் கூறியிருந்தார்.

உள்நாட்டுப் பொறிமுறையில் தங்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதால்தான், தாங்கள் அதனைத் தவர்த்ததாகவும் அவர் கூறுகின்றார். அப்படியென்றால், எதற்காக நாடாளுமன்றத்துக்குச் சென்று, அச்சபையில் உரையாற்ற வேண்டும்? இல்லையெனில் வெளிநாட்டுத் தூதரகங்களின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்திருக்கலாம்தானே? இத்தகைய துப்புக்கெட்ட காரணங்களைக் கூறி மக்களைப் பிளவுபடுத்தாமல், ஒற்றுமையுடன் பிரச்சினைகளைத் தீர்ப்பதை, தமிழ்க் காங்கிரஸ் ஊங்குவிக்க வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk




## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011–2479372–6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

நீ எப்போது பேரழகியானாய்? என்னைக் கிள்ளி விளையாடியவள் தானே நீ! இப்போது உனது சங்கோஜன் எனக்கு நம்பமுடியாமலும் நகைப்பையும் உண்டாக்குகின்றதே! காலம் நகர புலன்களின் பார்வை நோக்கு எல்லாமே மாறிவிடுகின்றன. உனது பழைய பேச்சுகள் என் செவிகளில் உரசியபடியே இருக்கின்றன.

எல்லோரும் தாங்கள் வளராமல் அப்படியே இருப்போம் என்றுதான் இளமையில் கருதுகின்றார்கள். இந்த நிலை நிலைத்திருந்தால் நல்லது என அநேகர் எண்ணுவதுண்டு.

ஆனாலும் பரவாயில்லை. எனக்கு உகந்தவளாக நீயும் மாறிவிட்டாய், வெட்கத்தை அப்படியே வைத்திரு! இந்தப் பழைய குறும்புப் பேச்சை தொடர்ந்து வைத்திரு. குழந்தைத் தனம் இரசனைக்குரியது. ஒளிந்து மறையாமல் என்னுடன் பேசு. உன்னைப் போலவே நீ இரு. என்றும் உன்னோடு நான்!

- பருத்தியூர் பால வயிரவநாதன்

# ஐ.தே.க இறந்துவிட்டதா; உயிருடனா?



எம்.எஸ்.எம். ஐயூப்

ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தாம் போட்டியிட்ட எந்தவொரு மாவட்டத்திலேனும், ஓர் ஆசனத்தையாவது வெற்றிபெற முடியாத அளவுக்கு, ஐக்கிய தேசிய கட்சியையும் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும், பொதுமக்கள் நிராகரித்துவிட்டார்களா?

நாம் இவ்வாறு கேட்கும்போது இவ்வளவு தெளிவாகத் தெரியும் ஒரு விடயத்தைச் சந்தேகிக்க வேண்டுமா என, மற்றவர்கள் கேட்கலாம். ஆனால், ஐ.தே.கவில் இருந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவும் இணைந்து இத்தேர்தலில் போட்டியிட்டு இருந்தால், அவர்கள் இம்முறை சஜித்தின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி பெற்ற 54 ஆசனங்களை விட ஒரு சில ஆசனங்களையாவது கூடுதலாகப் பெற்றிருக்க மாட்டார்களா?

அவ்விரு குழுக்களும் இணைந்துப் போட்டியிடும் அதேவேளை, ரணிலும் சஜித்தும் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு இருந்தால் ரணில் கடந்த முறை பெற்ற அளவில் விருப்பு வாக்குகளைப் பெறாவிட்டாலும் சஜித்தைவிட விருப்பு வாக்குகளைப் பெறாதிருப்பாரா? அவ்வாறாயின், என்ன நடந்திருக்கிறது? ஐக்கிய தேசிய கட்சியும் ரணில் விக்கிரமசிங்கவும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளனரெனக் கூற முடியுமா?

இது ஒரு விசித்திரமான நிலைமை. ஐதேக ஆதரவாளர்கள் சஜித்தை விட ரணிலை விரும்புகிறார்கள். அல்லது மதிக்கிறார்கள். ஆனால், அவரது தலைமையில் தேர்தல்களில் வெற்றியடைய முடியாது என்றும் கருதுகிறார்கள். எனவே அவர்கள் ஏறத்தாழ ஒட்டுமொத்தமாக இம்முறை சஜித்தின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் பின்னால் அணி திரண்டனர்.

இது மக்கள் விடுதலை முன்னணியின் நிலைமையையே ஞாபகமூட்டுகிறது. நாட்டு மக்களில் பெருமளவானோர் அக் கட்சியை விரும்புகிறார்கள், மதிக்கிறார்கள். அவர்கள் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவர்கள் என்றும் அவர்கள் கூடுதலான ஆசனங்களைப் பெற வேண்டும் என்றும் கூறுகிறார்கள். ஆனால், தேர்தல் வந்த போது அக் கட்சி பதவிக்கு வராது என நினைத்து ஏதாவதொரு பிரதான கட்சிக்கு வாக்களிக்கின்றனர்.

2004ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டணியை அமைத்து நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். அம்முறை அவர்களுக்கு 41 ஆசனங்கள் கிடைத்தன. ஸ்ரீலசுக தமது முன்னணி உறுப்பினர்களுக்கு வழங்க போதிய தேசிய பட்டியல் ஆசனங்கள் இல்லாமல் இருப்பதைக் கண்ட மக்கள் விடுதலை முன்னணி தமக்குக் கிடைத்த தேசிய பட்டியல் ஆசனங்களில் இரண்டை அக் கட்சிக்கு அன்பளிப்பாகவும் வழங்கியது.

அத் தேர்தலின் போது மக்கள் விடுதலை முன்னணியின் வேட்பாளர்கள் பல மாவட்டங்களில் தம்மோடு கூட்டாகப் போட்டியிட்ட பிரபல ஸ்ரீலசுக வேட்பாளர்களை விட கூடுதலாக விருப்பு வாக்குகளைப் பெற்றனர். ஆனால் அக் கட்சி தனியாகப் போட்டியிட்டு ஒருபோதும் 16 ஆசனங்களை விடக் கூடுதலாகப் பெற்றதில்லை. அக் கட்சியின் வேட்பாளர்கள் அந்தளவு விருப்பு வாக்குகளை அதற்கு முன்னரோ பின்னரோ பெற்றதும் இல்லை.

தாம் ஒரு கட்சியை ஆரம்பித்து ஓரிரு மாதங்களில் நடைபெற்ற தேர்தலில் 54 ஆசனங்களைப் பெற்றொம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் வீராப்புப் பேசுகின்றனர். அது பிழையான கருத்தாகும். ஐக்கிய மக்கள் சக்தி என்பது நடைமுறையில் புதிய கட்சியல்ல. ஐதேகவுக்குள் தலைமைத்துவப் போராட்டம் ஆரம்பித்த போது ஒரு சிலரைத் தவிர கட்சி ஆதரவாளர்கள் அனைவருமே கட்சியின் பெயர் பலகையையும் தலைவரையும் கைவிட்டுவிட்டு சஜித் பிரேமதாஸவின் அணியில் சேர்ந்துவிட்டனர். அந்தக் குழு தான் பின்னர் தமக்கு ஐக்கிய மக்கள் சக்தி என்ற பெயரைச் சூட்டிக் கொண்டது.

ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியினரும் இதேபோல் தாம் கட்சியை ஆரம்பித்து மூன்று வருடங்களில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம் எனக் கூறுகின்றனர். ஆனால், பொதுஜன முன்னணி என்பதும் புதியதாக ஆரம்பிக்கப்பட்ட கட்சியல்ல. கட்சியின் தலைவர்களையும் ஆதரவாளர்களையும் பார்க்கும் போது அது 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் மஹிந்தவின் தலைமையில் இயங்கிய ஸ்ரீலசுகவே என்பது தெளிவாகிறது. அவர்கள் தமக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணி என்ற பெயரைச் சூட்டிக் கொண்டுள்ளனர். அவ்வளவு தான்.

நாம் ஏற்கெனவே இப்பத்தியில் கூறியது போல், ஐக்கிய தேசிய கட்சியின் பிளவுக்கு கொள்கைப் பிரச்சினை ஒருபோதும் காரணமாகவில்லை. இந்தப் பிளவானது ரணிலின் தலைமையில் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்று கட்சிக்குள் பரவிய கருத்தின் விளைவாகும். உண்மையிலேயே இக் கருத்தானது ஐதேகவுக்குள் உருவானதல்ல. அது 1990 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலசுக தலைவர்கள் மந்திரத்தைப் போல் அவதூறாக எப்போதும் கூறி வந்த கருத்தாகும். அது பின்னர் ஐதேக ஆதரவாளர்களையும் ஆட்கொண்டது.

> **தலைமைத்துவ பிரச்சினை எழுந்த போதெல்லாம் ரணில் ஏமாற்றுக்காரராகச் செயற்படுவதாகவும் கொழும்பு கறுவாக்காட்டு அகம்பாவத்தோடு செயற்படுவதாகவும் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இவை தான் ரணிலின் பலவீனங்கள்**

இக் கருத்து சரியானதும் அல்ல. 1977 ஆம் ஆண்டு முதல் 1994 ஆம் ஆண்டு வரையிலான 17 ஆண்டுகளாக சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஸ்ரீலசுகவும் சிறிய பெரிய அத்தனை தேர்தல்களிலும் தோற்றது. ஆனால் 1994 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து தூக்கி எறியப்பட்ட ஐதேக, 7 ஆண்டுகளில் ரணிலின் தலைமையில் மீண்டும் நாடாளுமன்றத் தேர்தலொன்றில் வெற்றி பெற்றது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழீழ விடுதலை புலிகள் வடக்கில் தேர்தலைப் பகிஷ்கரிக்க மக்களைத் தூண்டாதிருந்தால் வெற்றி பெறுவது ரணிலே. அந்தத் தேர்தலில் பெரும்பாலும் ரணிலை ஆதரிக்கவிருந்த மூன்று இலட்சம் வட மாகாண மக்கள், தேர்தலை பகிஷ்கரித்தனர். மஹிந்த ராஜபக்ஷ ஒன்றரை இலட்சம் வாக்குகளாலேயே அத் தேர்தலில் வெற்றி பெற்றார். மீண்டும் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலிலும் ரணில் தலைமையில் ஐதேக, மஹிந்தவை தோற்கடித்து மைத்திரிபால சிறிசேனவை வெல்லச் செய்தது.

எனவே ரணில் தலைமையில் தேர்தல்களில் வெற்றி பெற முடியாது என்ற கருத்துச் சரியானதல்ல. அதேவேளை அறிவுத் திறன் மற்றும் அமைப்புத் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் ரணிலை விட சஜித் சிறந்த தலைவரா என்பதும் இன்னமும் நிரூபனமாகாத விடயம். ஆனால் மக்கள் தொடர்பு விடயத்தில் ரணில் நாட்டில் பல அரசியல் தலைவர்களுக்குப் பின்னாலேயே இருக்கிறார். அவர் தமது கட்சியின் எம்.பிக்களுடனாவது சிரிப்பதில்லை என ரஞ்சன் ராமநாயக்க ஒரு முறை பகிரங்கமாவே கூறியிருந்தார்.

அதேவேளை தலைமைத்துவ பிரச்சினை எழுந்த போதெல்லாம் ரணில் ஏமாற்றுக்காரராகச் செயற்படுவதாகவும் கொழும்பு கறுவாக்காட்டு அகம்பாவத்தோடு செயற்படுவதாகவும் பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். இவை தான் ரணிலின் பலவீனங்கள்.

ஆனால் ரணில், புலிகளையும் ஏமாற்றியவர் என்பதையும் மறந்துவிட முடியாது. 2002 ஆம் ஆண்டு அவர் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் கைச்சாத்திட்ட போர் நிறுத்த உடன்பாடு கடலை உள்ளடக்கவில்லை. எனவே அந்த ஒப்பந்தம் அமுலில் இருக்கும் போதே கடற்படையினர் புலிகளின் அனைத்து ஆயுதக் கப்பல்களையும் தாக்கி அழித்தனர். அந்த ஒப்பந்தத்துடனான சமாதான பேச்சுவார்த்தைகளின் விளைவாகவே கருணா அம்மான் புலிகளை விட்டு விலகும் நிலை ஏற்பட்டது. அது புலிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 'சர்வதேச பாதுகாப்பு வலையமைப்பு' என்று குறிப்பிட்டு ரணில் சர்வதேச சமூகத்தை சமாதான திட்டத்தில் சேர்த்துக் கொண்டார். அதன் விளைவே 2006 ஆம் ஆண்டு 25 ஐரோப்பிய நாடுகளும் கனடாவும் புலிகளைத் தடை செய்தமை.

ரணில் இவற்றைத் திட்டமிட்டே செய்தாரா என்பது இன்னமும் தெளிவாகாத விடயம். ஆயினும் ஓர் அரசாங்கம் என்ற வகையில் இவ்வாறு பெற்ற பலன்களைத் தேர்தல்களின் போது தெற்கில் சந்தைப்படுத்திக் கொள்ளும் திறமை ரணிலுக்கோ ஐதேகவுக்கோ இருக்கவில்லை.

அது மட்டுமல்ல, தமது கட்சியின் இரண்டாந்தர தலைவர்களும் ஆதரவாளர்களும் தம்மை விட்டு பிரிந்து கட்சியின் பெயர் பலகையும் தலைமையகமும் மட்டுமே தன்னிடம் இருக்கிறது என்பதை ரணில் விளங்கிக் கொள்ளவில்லை. அதனாலேயே அவரது தலைமையில் ஐதேக தனியாகக் கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட முன்வந்தது.

அவரால் இதனை உணர முடியாவிட்டாலும் ஐதேகவுடன் எப்போதும் இருந்த சிறுபான்மை கட்சிகளின் தலைவர்கள் அதனை உணர்ந்தனர். எனவே அவர்களும் ரணிலை விட சிறுபான்மையினர் விடயத்தில் அக்கறையற்றவரான சஜித்துடன் இணைந்து கொண்டனர். அந்த விடயத்தில் ரணிலை விட சஜித் அக்கறையற்றவர் என்பது இம்முறை சிறுபான்மை மக்களின் வாக்குகளைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் மூலம் சிறுபான்மை கட்சிகளுக்கு ஆசனங்களை வழங்க மறுத்துவிட்டதன் மூலம் தெளிவாகிறது.

ஐதேகவினதும் ஐமசவினதும் தற்போதைய நிலைமைக்கான காரணத்தை 2015க்கும் 2018க்கும் இடைப்பட்ட காலத்தில் தான் கண்டுபிடிக்க வேண்டும். ஏனெனில் 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஐதேக தோல்வியடையாவிட்டால் அக் கட்சி பிளவுபடும் சாத்தியங்களும் இம் முறை ஜனாதிபதித் தேர்தலிலோ பொதுத் தேர்தலிலோ தோல்வியடையும் சாத்தியங்களும் குறைவாகவே இருந்திருக்கும்.

## கடிதங்கள்



### வீதியோர மரங்களால் பாரிய ஆபத்து

முல்லைத்தீவு, நெடுங்கேணி பிரதான வீதியில் சரிந்த நிலையிலுள்ள பாரிய மரங்களால் பாதசாரிகள், வாகன சாரதிகள் உயிரச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

முல்லைத்தீவு - சிலாவத்தைப் பகுதியில் வீதியோரத்தில் இருந்த மரமொன்று, ஞாயிற்றுக்கிழமை (29) முறிந்து விழுந்தமையால் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

> **தற்போது நீடித்துவரும் வானிலையைக் கருத்திற்கொண்டு, சரிந்த நிலையிலுள்ள மரங்களை அப்புறப்படுத்தி, பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும்**

சரிந்த நிலையிலுள்ள மரங்களால், இப்பகுதி வழியாகப் பயணிப்பவர்களின் பாதுகாப்புக் கேள்விக்குறியாகியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

மேற்படிப் பகுதியில், கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, பழமைவாய்ந்த மரங்கள் வீதியோரம் முறிந்து விழுவது அதிகரித்துள்ளது.

எனவே தற்போது நீடித்துவரும் வானிலையைக் கருத்திற்கொண்டு, சரிந்த நிலையிலுள்ள மரங்களை அப்புறப்படுத்தி, பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று, பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

–க.அகரன்

# செலான் வங்கியின் புதிய ATM இயந்திரம்



வாடிக்கையாளர்களின் நிதித் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் தங்கள் உறுதிப்பாட்டைத் தொடர்கின்ற வகையில், தனது புதிய ATM இயந்திரத்தை, பாதுக்கையில் அமைந்துள்ள இலங்கைத் தொழில்நுட்பப் பல்கலைக்கழக (SLTC) வளாகத்தில், செலான் வங்கி சமீபத்தில் திறந்துவைத்தது.

செலான் வங்கியின் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் ரமேஷ் ஜயசேகரவினால், வைபவ ரீதியாக புதிய ATM இயந்திரம் திறந்து வைக்கப்பட்டது. இந்த ATM இயந்திரம், SLTCஇல் கல்வி கல்வி பயிலும் மாணவர்களுக்கு வசதியாக அமைந்திருக்கும். ஏனெனில், எந்த நேரத்திலும் பணத்தை திரும்பப் பெற விரும்புவோருக்குத் எளிதான அணுகலை உறுதிசெய்துள்ளது. செலான் வங்கியால் திறக்கப்பட்டுள்ள 216ஆவது ATM இயந்திரமாக இது அமைந்துள்ளது.

## கொஸ்கொட கறுவா பயிற்சி நிலையத்தில்
# புதிய கறுவா பதப்படுத்தல் நிலையம்



கொஸ்கொடயில் "Bought Tree Factory" (BTF) எனும் பெயரில், கறுவா பதப்படுத்தல் நிலையமொன்றை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை கறுவா பயிற்சி நிறுவனம் அண்மையில் ஆரம்பித்தது. இந்த நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு, அண்மையில் கறுவா பயிற்சி நிறுவனத்தில் இடம்பெற்றதுடன், இந்நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுக்குழுவின் தலைமை அதிகாரி பிராங்க் ஹெஸ், UNIDO இன் கலாநிதி. ஹைரோ அன்ட்ரஸ் வில்லமில் - டயஸ், காலி மாவட்டம், தென் மாகாண சபையின், பலப்பிட்டிய பிரதேச சபையின் தவிசாளர் சமன் டி சில்வா, உள்ளக விவகார அமைச்சின், பலப்பிட்டிய பிரதேச செயலாளர் பி.பி.எஸ். அனுராத, ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி. ஜி.ஜயசிங்க மற்றும் கறுவா பயிற்சி நிலையத்தின் தவிசாளர் சாரத டி சில்வா அடங்கலாக, பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தமது வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேறாண்மை ஆகியவற்றைச் சீராக்கம் செய்யும் நோக்கில், கறுவா பதப்படுத்தல் நிலையமொன்றை நிறுவுவதனூடாக, ஏற்கெனவே காணப்படும் பயிற்சி வளாகத்தை கறுவா பயிற்சி நிலையம் விரிவாக்கம் செய்கின்றது. புதிய உள்ளடக்கத்தினூடாக வருடம் முழுவதும் வருமானமீட்டக்கூடியதாக இருக்கும் என்பதுடன், குறிப்பாக பயிற்சிக்கான கேள்வி குறைவாகவும் பதப்படுத்தலுக்கான கேள்வி அதிகமாகவும் காணப்படும் அறுவடைக் காலப்பகுதியில் அதிக பயன்பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். விளைச்சல் பகுதிகளிலிருந்து பதப்படுத்தல் நிலையம் கறுவா மரங்களை நேரடியாக கொள்வனவு செய்யும் என்பதால், இடைத்தரகர்களுக்கான தேவை காணப்படாது. இதனால், பலபிட்டிய, கரந்தெனிய மற்றும் அம்பலாங்கொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சிறியளவிலான உற்பத்தியாளர்களுக்கு உச்ச வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும்.

வருட இறுதியில், முழுமையாக இயங்கும் திறனைக் கொண்டிருக்கும் என எதிர்பார்க்கப்படும் இந்தக் கறுவா பதப்படுத்தல் நிலையத்தினால், 20 புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும் என்பதுடன், 100க்கும் அதிகமான மறைமுகத் தொழில் வாய்ப்புகளும் உருவாக்கப்படும். இந்தக் கறுவா பதப்படுத்தல் நிலையம், இரு அறுவடைப் பருவ காலப்பகுதியில், மாதமொன்றில் 1,350 கிலோகிராம் எடையுடைய கறுவா உற்பத்தியை மேற்கொள்வதற்கு, 24,000 கறுவா மரங்களைப் பதப்படுத்தும் திறனைக் கொண்டிருக்கும். முழு ஆற்றலுடன் இயங்கும் நிலையில், இந்தக் கறுவா பதப்படுத்தல் நிலையத்தினூடாக, மாதமொன்றுக்கு 2.7 மில்லியன் ரூபாய் மேலதிக விற்பனை வருமானத்தை, கறுவா பயிற்சி நிறுவனத்துக்குப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

## எண்ணெய்த் தன்மையான சருமத்துக்கு புத்துயிரூட்டும்
# The Body Shop இன் Tea Tree தெரிவுகள்

பருவப்பெயர்ச்சி காலமாகும், அத்துடன் சருமம் எண்ணெய்த் தன்மை வாய்ந்ததாக் காணப்படுகின்றது. ஈரப்பதனூட்ட அவசியமற்ற இரு காரணங்கள். எண்ணெய்த்தன்மை வாய்ந்த சருமம் ஈரப்பதனான சருமத்துக்கு ஒப்பான நிலையைக் கொண்டிருக்கும் எனும் தவறான அபிப்பிராயம் காணப்படுவதுடன், நீர்த்தன்மை என்பது அளவுக்கதிகமாக காணப்படுவதுடன், பயனற்றதாகவும் அமைந்துவிடுகின்றது. தினசரி சருமப்பராமரிப்பிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். ஏற்கெனவே பளபளப்பான எனது முகத்துக்கு ஏன் மேலும் பளபளப்பைச் சேர்க்க வேண்டும்?.

எண்ணெய்த்தன்மையான சருமம் என்பது, எண்ணெய்ச் சுரப்பிகளினால் சருமத்தில் எண்ணெய்த்தன்மை சுரப்பதால் ஏற்படுகின்றது. சருமத்தில் வெக்ஸ், எண்ணெய்த்தன்மை ஏற்படுகின்றது. எண்ணெய்ச் சுரப்பி என்பது, சருமப் பாதுகாப்புக்கு அவசியமான போதிலும், அளவுக்கதிகமான எண்ணெய்ச் சுரப்பினால் எண்ணெய்த்தன்மை வாய்ந்த சருமம், துவாரங்கள் அடைபடல் மற்றும் பருக்கள் போன்றன தோன்றுகின்றன.

எண்ணெய் மற்றும் நீர் ஆகிய இரு வேறு அம்சங்கள் என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். எமது சருமம், ஆரோக்கியமாகத் திகழ வேண்டும். எண்ணெய்த்தன்மையான சருமத்தைக் கொண்டிருப்பவர் சௌகரியமாக உணர்வதற்கு, சருமப் பராமரிப்பு மந்திரமான - ஈரப்பதனான சருமம் என்பது ஆரோக்கியமான சருமம் எனப் பொருள்படும் என்பதற்கமைய அமைந்துள்ளது. பலர் எண்ணெய்த் தன்மையை ஈரப்பதன் என்பதுடன் குழப்பிக் கொள்கின்றனர். ஆனாலும், ஈரப்பதனூட்டிகள் என்பதன் செயற்பாடு, அதற்கு நீர்த்தன்மையைச் சேர்ப்பதாக அமைந்துள்ளன. போதியளவு நீர் இன்மையால், சருமம் உலர்ந்த நிலையை அடையும் போது, உங்கள் உடலிலிருந்து அதிகளவு எண்ணெய் சுரக்கப்படுகின்றது. இந்த அளவுக்கதிகமான எண்ணெய்த்தன்மையான துவாரங்கள் அடைபடல் ஏற்பட்டு, மாசுபடும் நிலையை எய்துகின்றது.

துரதிர்ஷ்டவசமாக, எண்ணெய்த்தன்மையை



சுரக்கும் எண்ணெய்ச் சுரப்பிகள் காரணமாக, சருமங்கள் பளபளப்பாகக் காணப்படுவதுடன், ஹோமோன் மாற்றங்கள் காரணமாகவும் இந்நிலை எழுகின்றது. தொடர்ச்சியான சருமப்பராமரிப்பு செயற்பாடுகளினூடாக மாசுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

The Body Shop எப்போதும் சருமத்தை சிறந்த சமநிலையில் பேணுவதற்கு முயற்சிக்கின்றது. சகல விதமான சருமங்களுடனும் செயலாற்றி, அவற்றை ஆரோக்கியமாகவும் சிறப்பாகவும் உணரச் செய்ய முயற்சிக்கின்றன. Tea Tree சருமப் பராமரிப்பு தெரிவுகளினூடாக, சருமப் பராமரிப்பு வழங்கப்படுவதுடன், குணமாக்கல் மற்றும் ஈரப்பதனூட்டல் போன்ற அம்சங்கள் காணப்படுகின்றன. தேயிலை மரத்திலிருந்து பெறப்பட்ட சிறந்த இயற்கை சேர்மானங்களைக் கொண்டுள்ளது. கிருமி நீக்கல் திறனுக்கு புகழ்பெற்றுள்ளதுடன், அளவுக்கதிகமான எண்ணெயை அகத்துறிஞ்சிக்கூடியதாக அமைந்துள்ளது. கரு வளையங்கள் மற்றும் மாசுகளுக்கு சிறந்த தீர்வாக தேயிலை மர எண்ணெய் அமைந்துள்ளது. The Body Shop இன் உயர் வினைத்திறன் வாய்ந்த வுநய வுசநந ழுடை என்பது 0.67 கட ழண போத்தலில் கிடைக்கின்றது. இதில் சுமார் 15,000 தேயிலை இலைகளிலிருந்து பெறப்பட்ட எண்ணெய் காணப்படுகின்றது. சக்தி வாய்ந்த, தூய்மைப்படுத்தல் அம்சங்களைக் கொண்ட இந்த சேர்மானம் துரிதமாக பிரயோகித்து, மருக்களை குறைத்துக் கொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது. சருமத்தை உள்ளிருந்து நிவாரணப்படுத்துவதாக அமைந்துள்ளதுடன், சருமத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை பேணும் வகையிலும், இளம் சிவப்பு பளபளப்பை வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் யூனியன் அஷ்யூரன்ஸ்
# உடன்படிக்கை கைச்சாத்து

ஜோன் கீல்ஸ் துணை நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், இலங்கை அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன், புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளது. "சுவ அபிமன்" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பங்காண்மையினூடாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு, பிரத்தியேகமான ஆயுள் காப்புறுதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கையில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர். அனுருத்த பாதெனிய மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்நிகழ்வில், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் அங்கத்தவர்கள் மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் சிரேஷ்ட நிர்வாக அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வு, ஒகஸ்ட் 20ஆம் திகதி, OPA கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

யூனியன் அஷ்யூரன்சின் பிரகாரம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடனான இந்தப் புதிய பங்காண்மை, அதன் அங்கத்தவர்களுக்குக் கல்வி, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் முதலீடு போன்ற பிரிவுகளில் நெகிழ்ச்சியான மற்றும் மாற்றியமைத்துக் கொள்ளக்கூடிய காப்புறுதித் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜூட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "மூலோபாயப் பங்காண்மைகளினூடாக, எமது சென்றடைவை விஸ்தரிப்பதற்கு மேலாக, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்துடனான இந்த கைக்கோர்ப்பினூடாக, வளர்ந்து வரும் பங்காண்மைகளுக்கு உயர் பெறுமதி சேர்க்கப்பட்டுள்ளது. இந்தப் பங்காண்மைக்கு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தை வரவேற்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். அதன் அங்கத்தவர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளுக்குச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் வாய்ப்பை நாம் கொண்டுள்ளதுடன், காப்புறுதித் தீர்வுகளினூடாக, வாழ்க்கைத்தரங்களுக்குப் பொருத்தமான தரமான காப்பீடுகளைப் பெற்றுக் கொடுக்கக்கூடிய நிலையிலுள்ளோம்" என்றார்.

முன்னணி நிபுணத்துவ அமைப்புகளுடன் பங்காண்மைகளைக் கட்டியெழுப்புவதில், யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை ஈடுபடுத்தியுள்ளதுடன், பரந்தளவு துறைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி, பாதுகாப்பு என்பதன் பிரகாரம் பரந்தளவு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இலங்கையின் பரந்தளவிலான பொது மக்களுக்கு, உயர் பதவிகளில் காணப்படும் நபர்கள் அனுபவிக்கும் பாதுகாப்பு போன்ற உதாரணங்களுக்கமைய காப்புறுதியின் அனுகூலங்களை ஏற்படுத்திக் கொடுப்பது இலக்காக அமைந்துள்ளது.

1926ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால், அதன் அங்கத்தவர்களுக்கு, 90 வருடங்களுக்கு மேலாக மேம்படுத்தல் மற்றும் நலன்புரி உதவிகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.




## கொவிட்-19 இலிருந்து பாடசாலை மாணவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளுக்கு
# ஹேமாஸ் ஷீல்ட் சவர்க்காரம் பங்களிப்பு

கொவிட்-19 தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஹேமாஸ் FMCGஇனால் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டிருந்த கிருமி நீக்கும் ஆற்றல் படைத்த சுகாதாரச் சவர்க்காரமான ஷீல்ட் பங்களிப்பு வழங்கியிருந்தது.

வைரஸ் தொற்றுப் பரவல் நாட்டின் குடிமக்களைப் பாதிக்காத வகையில் தவிர்த்துக் கொள்ளும் செயற்பாடுகளுக்கு, கடந்த மாதங்களில் ஹேமாஸ் FMCG பல்வேறு வழிகளில் பங்களிப்பு வழங்கியிருந்தது. ஷீல்ட் தயாரிப்புகள் அடங்கலாக பெருமளவு ஹேமாஸ் FMCG பிரத்தியேகப் பராமரிப்புத் தயாரிப்புகள் தனிமைப்படுத்தல் நிலையங்களில் பயன்படுத்துவதற்காக, இலங்கை இராணுவத்துக்கு நன்கொடையாக வழங்கப்பட்டிருந்தன. இலங்கைத் தேசிய வைத்தியசாலை, ராகம - கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை, நீர்கொழும்பு மாவட்டப் பொது வைத்தியசாலை ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகளுக்கு, ஷீல்ட் சனிடைசர் பொதிகள் விநியோகிக்கப்பட்டிருந்தன. அத்துடன், வெலிசற கடற்படைப் பொது வைத்தியசாலையில் பணியாற்றும் முன்னிலை ஊழியர்களின் பயன்பாட்டுக்காக, பெருமளவு ஷீல்ட் சவர்க்காரங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்தன. மாணவர்கள், தமது கல்விச் செயற்பாடுகளைத் தொடர்வதற்காக, மீண்டும் பாதுகாப்பான வகையில் பாடசாலைகளுக்குத் திரும்பும் செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை உணர்ந்த ஹேமாஸ் FMCG, பாதுகாப்பான மற்றும் கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபட்ட சூழலை உறுதி செய்வதற்காக சுத்தமான நீர் மற்றும் சவர்க்காரம் கொண்டு கைகளை அடிக்கடி கழுவிக் கொள்ளும் நடவடிக்கையை ஊக்குவிப்பதற்காகப் பங்களிப்பு வழங்க முன்வந்திருந்தது.

பாடசாலைகளுக்கு மீளத்திரும்பிய மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், கைகளைக் கழுவும் பகுதிகள் மற்றும் ஷீல்ட் சவர்க்காரப் பொதிகள் போன்றவற்றை ஹேமாஸ் FMCG வழங்கியிருந்தது. மேல் மாகாணத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு ஷீல்ட் சவர்க்காரப் பொதிகளை ஹேமாஸ் நன்கொடையாக வழங்கியிருந்தது.



# பிறீமா 'ரன் பியவர' வெகுமதிகள்

பிறீமா சிலோன் (பிரைவேட்) லிமிடட், DFCC வங்கியுடன் இணைந்து, வாடிக்கையாளர்களுக்கான பிரத்தியேக வெகுமதித் திட்டமான "பிறீமா ரன் பியவர" ஐ முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது.

"பிறீமா ரன் பியவர வெகுமதித் திட்டம் சீசன் 04" என இவ்வருடம் பெயரிடப்பட்டுள்ள பிறீமா ரன் பியவர வெகுமதித் திட்டம், தொடர்ந்து 4 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படும் புதுமையான விசுவாசத் திட்டமாகும். இது, பிறீமாவின் விசுவாசமான வாடிக்கையாளர்களை ஒரு புதிய முறையில் அங்கிகரித்து, வெகுமதி



அளிக்க, பல மதிப்புச் சேர்த்தல் மற்றும் மேம்பாடுகளைக் கொண்ட ஒரு திட்டமாகும். இந்த உன்னத வாடிக்கையாளர்கள், கடந்த 4 தசாப்தங்களாக பேக்கரி மற்றும் தொடர்புடைய தொழில்களின் தரத்தை உயர்த்துவதற்காக பிறீமாவுடன் இணைந்துள்ளனர்.

DFCC வங்கியுடனான ஒப்பந்தம், விசுவாசமான பிறீமா வாடிக்கையாளர்களுக்கு நாடு முழுவதும் வணிக பங்காளிகளிடம் பயன்படுத்தக்கூடிய லாயல்டி புள்ளிகளுடனான ஒரு பிரத்தியேகமான டெபிட் கார்ட் வழங்கப்படுவதை உறுதி செய்யும். வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப தெரிவு செய்யும் வகையில்; இவ்வணிக பங்காளிகள், ஓய்வு, சுகாதாரம், காப்பீடு, நகைகள், வீட்டு உபகரணங்கள், ஆடை மற்றும் சூப்பர்மார்கெட் துறைகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

# திலந்தவுக்கு இலங்கை சுற்றுலா அனுசரணை

செப்டெம்பர் 5ஆம் திகதி முதல் நவம்பர் 15 ஆம் திகதி வரை ஜேர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ் மற்றும் ஸ்பெய்ன் ஆகிய நாடுகளில் இடம்பெறவுள்ள Lamborghini Super Trofeo Europe Championship 2020 போட்டியில் இலங்கை சார்பாக திலந்த மாலகமுவ பங்கேற்கவுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை கொடியை உலகின் பல பாகங்களுக்கு கொண்டு சென்ற பெருமையை தன்வசம் கொண்டுள்ள இவர், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி மோட்டார் பந்தயங்களில் பல வெற்றிகளை ஈட்டியுள்ளார்.

இந்த ஆண்டு போட்டியின் போது, கொவிட்-19 தொற்றுப் பரவலின் பின்னர் இலங்கையில் சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்புவது தொடர்பில் ஐரோப்பிய நாடுகளில் பிரச்சார செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு கவனம் செலுத்தப்படும். போட்டிகளில் தேசத்தின் கீர்த்தி நாமத்தை இணைப்பது



தொடர்பில் முக்கியத்துவத்தை அடையாளப்படுத்தும் வகையில் இலங்கை சுற்றுலாத்துறையுடன் திலந்த கைகோர்த்து செயலாற்ற முன்வந்துள்ளார். இந்த போட்டித் தொடர் முழுவதிலும் திலந்தவுடன் கைகோர்த்து இயங்க இலங்கை சுற்றுலாத் துறை முன்வந்துள்ளது. திலந்தவின் பந்தய வாழ்வில் முதல் தடவையாக இலங்கை சுற்றுலா கைகோர்த்துள்ளமை விசேடமாக குறிப்பிடத்தக்கது.

ஆசியா, ஐரோப்பா மற்றும் உலகளாவிய ரீதியில் கார் பந்தய போட்டிகளில் திலந்த பல வெற்றிகளைச் சுவீகரித்துள்ளார். உலகின் நீண்ட கால விளையாட்டு வீரர் எனும் கின்னஸ் உலக சாதனையை நிகழ்த்தும் நிலையை அண்மித்துள்ளார். 42 வருட காலமாக இவர் பந்தய விளையாட்டில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கையை சர்வதேச மட்டத்தில் ஊக்குவிக்கும் திறன் கொண்ட விளையாட்டு வீரராக திலந்த மாலகமுவை நான் இனங்கண்டுள்ளேன். இவரைப் போன்ற திறன் படைத்தவர்களை ஊக்குவிக்க வேண்டியது எமது பொறுப்பாக அமைந்துள்ளதுடன், தேசத்துக்கும் அவரினூடாக பெறுமதி சேர்க்கக்கூடியதாக அமைந்திருக்கும் என தாம் கருதுவதாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். உலகளாவிய ரீதியில் வசிக்கும் இலங்கையர்களிடமிருந்து எனக்கு கிடைக்கும் அன்பும் ஆதரவுக்கும் நான் எப்போதும் நன்றியுடையவனாக உள்ளேன். இலங்கையின் பெருமையை, எனது விளையாட்டினூடாக உலகறிய செய்ய முடிந்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றேன் என திலந்த தெரிவித்தார்.

# பூஜா ஹெக்டே வருத்தம்



**“சினிமாக்காரர்கள் என்றாலே படப்பிடிப்பில் பிஸியாக இருப்போம். ஆனால் இப்போது, எல்லோருமே வீட்டில்தான் இருக்கிறோம். நான், மும்பையில் பிறந்து வளர்ந்தாலும், எங்கள் வீட்டில் தென்னிந்திய சூழலைத்தான் பார்க்க முடியும்**

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக, பண்டிகைகளைக் கொண்டாட முடியாமை வருத்தமளிப்பதாக, நடிகை பூஜா ஹெக்டே தெரிவித்துள்ளார்.

தமிழில், “முகமூடி” திரைப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமான பூஜா ஹெக்டே, தெலுங்கு, ஹிந்தி திரைப்படங்களில் நடிக்கிறார்.

“சினிமாக்காரர்கள் என்றாலே, படப்பிடிப்பில் பிஸியாக இருப்போம். ஆனால் இப்போது, எல்லோருமே வீட்டில்தான் இருக்கிறோம். நான், மும்பையில் பிறந்து வளர்ந்தாலும், எங்கள் வீட்டில் தென்னிந்தியச் சூழலைத்தான் பார்க்க முடியும்” என்று அவர் தெரிவித்துள்ளார்.

தென்னிந்தியாவில் நடக்கும் எல்லாப் பண்டிகைகளையும், ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடுவோம். பொங்கல் என்றாலே, எனது அம்மா செய்யும் லட்டுதான் நினைவுக்கு வரும். காத்தாடி பறக்க விடுவோம். தசரா என்றால், எங்கள் வீட்டில் கொலு இருக்கும். பஜனை நடத்துவோம். நான் நடிகையான பிறகும்கூட, அந்த ஒன்பது நாள்கள் பஜனைக்கு வந்து உட்கார்ந்து விடுவேன்.

“இப்போது கொரோனாவால் நண்பர்கள், உறவினர்களுடன் சேர்ந்து பண்டிகைகளை உற்சாகமாக கொண்டாட முடியவில்லை. விநாயகர் சதுர்த்தியை விமரிசையாகக் கொண்டாட முடியவில்லை. கொரோனா முடியும் முன்பு, எல்லாப் பண்டிகைகளும் வீணாகப் போய்விடும் என்ற வருத்தம் இருக்கிறது” என்று, நடிகை பூஜா ஹெக்டே தெரிவித்துள்ளார்.



# ஆர்யா வழியில் ஐஸ்வர்யா

தவறாமல் உடற்பயிற்சி செய்து, உடலைத் திடகாதிரமாக வைத்திருக்கும் நடிகர் ஆர்யா, சைக்கிள் பந்தய வீரரும் கூட.

சைக்கிள் ஓட்டுவதில் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றிருக்கிறார்.

ஆர்யாவைத் தொடர்ந்து, நடிகர் சூர்யா உள்ளிட்டோரும் சைக்கிளிங் செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அந்த வரிசையில், நடிகர் தனுஷின் மனைவியும் ரஜினியின் மகளும், இயக்குநருமான ஐஸ்வர்யாவும் புதிதாக இணைந்திருக்கிறார்.

தான் சைக்கிளிங் சென்று வந்த புகைப்படத்தைப் பதிவிட்டுள்ள ஐஸ்வர்யா, அனைவருக்கும் ஓணம் வாழ்த்துக் கூறியிருக்கிறார்.

அண்மைக் காலமாக, தனது உடற்பயிற்சிப் படங்களையும் ஐஸ்வர்யா வெளியிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அரசியலுக்கு அஜித் வருவார்

## பெண் சித்தர் லட்சுமி அம்மாள் கணிப்பு



நடிகர் அஜித்குமார், நிச்சயம் அரசியலுக்கு வருவார் என்றும் சிம்புவுக்கு வாயாடிப் பெண்தான் மனைவியாகக் கிடைப்பார் என்றும், பெண் சித்தர் லட்சுமி அம்மாள் என்பவர் அளித்துள்ள பேட்டி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பெண் சித்தர் லட்சுமி அம்மாள் என்பவர், அவ்வப்போது பரபரப்பாகப் பேட்டி கொடுத்து வருபவர். இந்நிலையில், அண்மையில் ஊடகம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ள லட்சுமி அம்மாள், திரை உலகினர் குறித்து, தனது கருத்தைக் கூறியுள்ளார்.

சிம்பு மிகவும் நல்லவர் என்றும் குழந்தை மாதிரி தனக்கு இப்படித்தான் ஒரு மனைவி வரவேண்டும் என்று தேடி வருகிறார் என்றும், ஆனால் அவரது ஜாதகத்தில் தோஷம் இருப்பதால், தோஷம் நிவர்த்தி செய்தால் கண்டிப்பாக அழகான பெண் கிடைக்கும் என்றும், ஆனால் அந்தப் பெண் வாயாடியாகத் தான் இருப்பார் என்றும் கூறியுள்ளார்.

மேலும், ரஜினிகாந்த் ஒரு ஆன்மீகவாதி என்றும் இதுதான் பாதை என்று அவர் செல்லாமல், கிடைக்கும் பாதையில் செல்வார் என்றும், அஜித் அன்புக்கு ஏங்குபவர் என்றும் அன்பால்தான் அவர் ஷாலினியை திருமணம் செய்து கொண்டார் என்றும் கூறியுள்ள லட்சுமி அம்மாள், அஜித் கண்டிப்பாக அரசியலுக்கு வருவார் என்றும் கணித்துக் கூறியுள்ளார்.

### ஏ.சி மிலனுடன்

## ஒப்பந்தத்தை நீடித்த ஸல்டான் இப்ராஹிமோவிச்



இத்தாலிய சீரி ஏ கழகமான ஏ.சி மிலனுடனான ஒப்பந்தத்தை ஓராண்டால் முன்களவீரர் ஸல்டான் இப்ராஹிமோவிச் நீடித்துள்ளதாக அக்கழகம் அறிவித்துள்ளது.

ஏ.சி மிலனுடனான 38 வயதான ஸல்டான் இப்ராஹிமோவிச்சின் ஒப்பந்தமானது கடந்த பருவகால முடிவுடன் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய அமெரிக்காவின் மேஜர் லீக் சொக்கர் கழகமான எல்.ஏ கலக்ஸியிலிருந்து கடந்த கோடைப்பருவகாலத்தில் விலகிய பின்னர் கடந்தாண்டு டிசெம்பர் மாதத்தில் ஏ.சி மிலனுடன் ஸல்டான் இப்ராஹிமோவிச் இணைந்திருந்தார். 18 போட்டிகளில் விளையாடி 10 கோல்களை அதன்பின்னர் ஸல்டான் இப்ராஹிமோவிச் பெற்றிருந்தார்.

### ஐ. அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடர்;

## இரண்டாம் சுற்றில் ஜோக்கோவிச், பிளிஸ்கோவா

ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐக்கிய அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் முதல்நாள் போட்டிகளில் உலகின் முதல்நிலை வீரரான நொவக் ஜோக்கோவிச், மூன்றாம்நிலை வீராங்கனையான கரோலினா பிளிஸ்கோவா ஆகியோர் தத்தமது முதலாவது சுற்றுப் போட்டிகளில் வென்று இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தகுதிபெற்றுள்ளனர்.

நேற்று அதிகாலை நடைபெற்ற போட்டியில் 6-1, 6-4, 6-1 என்ற நேர் செட்களில் பொஸ்னியா அன்ட் ஹெர்ஸிகோவினாவின் டமிர் டுஸ்மூரை சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச் வென்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது முதலாவது சுற்றுப் போட்டியில் ஸ்பெய்னின் அல்பேர்ட் றாமோஸ் வினோலஸை 6-2, 6-1, 6-1 என்ற நேர் செட்களில் வென்ற உலகின் ஆறாம்நிலை வீரரான கிரேக்கத்தின் ஸ்டெபனோஸ் சிட்டிபாஸ், இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்தார்.

இதேவேளை, தனது முதலாவது சுற்றுப் போட்டியில் தென்னாபிரிக்காவின் கெவின் அன்டர்சனை எதிர்கொண்ட உலகின் ஏழாம்நிலை வீரரான ஜேர்மனியின் அலெக்ஸான்டர் ஸ்வ்ரேவ், 7-6 (7-2), 5-7, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதிபெற்றிருந்தார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை நடைபெற்ற தனது முதலாவது சுற்றுப் போட்டியில் ஐக்கிய அமெரிக்காவின் றெய்இ ஒபெல்காவை எதிர்கொண்ட உலகின் 10ஆம் நிலை வீரரான பெல்ஜியத்தின் டேவிட் கொபின், 7-6 (7-2), 3-6, 6-1, 6-4 என்ற செட் கணக்கில் வென்று இரண்டாவது சுற்றுப் போட்டிக்குத் தகுதிபெற்றிருந்தார்.





### காதலருடன்

## நயனின் ஓணம் கொண்டாட்டம்



லேடி சூப்பர் ஸ்டார் நயன்தாரா, தனது காதலர் விக்னேஷ் சிவனுடன் ஓணம் பண்டிகையைக் கொண்டாட, தனி விமானத்தில் சென்னையிலிருந்து கொச்சி சென்றார் என்ற செய்தி வெளியானது.

இந்நிலையில், தற்போது கேரளாவில் உள்ள தனது வீட்டில், நயன்தாரா ஓணம் பண்டிகையைக் கொண்டாடிய புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.

விக்னேஷ் சிவன் மற்றும் நயன்தாரா ஆகிய இருவரும் நெருக்கமாக இருக்கும் புகைப்படங்கள், நயன்தாரா இரசிகர்களால் அதிகளவு பகிரப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஓணம் பண்டிகையைக் கொண்டாட, தனது சொந்த ஊருக்குச் செல்வதைத் தவறாமல் கடைபிடித்துவரும் நயன்தாரா, இந்த ஆண்டு தனது காதலரையும் அழைத்துச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க,து.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 2 செப்டெம்பர் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.